பக்கங்கள் : பதின்நான்கு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆணி 03 செவ்வாய்க்கிழமை (17.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 202

நாவாந்துறைப் பொதுப்பண்ணை
மாநகர சபை, யாழ்ப்பாணம்

தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் வவுனியாவில் 12 பொலிஸார் பலி!

பொதுமக்கள் 4 பேரும் 19 பொலிஸாரும் காயம்

கொழும்பு, ஜூன் 17

வவுனியா நகரின் மத்தியில், பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக முன்றலில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் நடத்திய வெடி குண்டுத் தாக்குதலில் மூன்று சார்ஜண்டுகள், மூன்று பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட பன்னிரண்டு பொலிஸார் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

நான்கு சப் இன்ஸ்பெக்டர்கள், நான்கு சார்ஜண்ட்டுகள், மூன்று பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட 19 பொலிஸாரும், மூன்று பாடசாலைச் சிறார்கள் உட்பட நான்கு பொதுமக்களும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

மேலும் பதினைந்து பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

காயமடைந்த பொலிஸாரில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை 7.10 மணியளவில் வவுனியா நகரில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இருந்து பல்வேறு இடங்களுக்கான கடமைகளுக்குப் புறப்படவிருந்த பொலிஸாரும், பல்வேறு இடங்களினின்றும் கடமை முடித்துத்

(12ஆம் பக்கம் பார்க்க)

இன்று நயினை நாகபூசணிக்கு தேர்த் திருவிழா

பூசைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வரலாற்றுப் புகழ் மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 8 ணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டபப்

(12ஆம் பக்கம் பார்க்க)

மதவாச்சி ஊடாகத் தமிழர் சென்றுவர நேற்றும் தடை

மன்னார்,ஜூன்.17

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலையடுத்து வவுனியா மற்றும் மன்னார் பிரதேசங்களிலிருந்து மதவாச்சி ஊடான தென்பகுதிப் போக்குவரத்துக்கள் தற்காலிகமாகத் தடைப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக தமிழ்ப் பயணிகள் எவரும் மதவாச்சி ஊடாகப் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றும், சிங்களவர் மற்றும் முஸ்லிம் பயணிகள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர் என்றும் அறிய முடிந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

குறைந்தது ரூ.5,000 சம்பள உயர்வு கோரி ஜூலை 10 இல் பொது வேலைநிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 17

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவேண்டும் என்பது உட்பட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து 366 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து அடுத்த மாதம் 10ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஒருநாள் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

இந்தப் போராட்டத்திற்கு உரிய பதில்

(12ஆம் பக்கம் பார்க்க)

நாளைய உதயனில் கல்விச்சுடர்

புதுக்குடியிருப்பில் நேற்றும் தாக்குதல்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதிமீதும் நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் காவலரண்கள் மீதும் நேற்றும் வான் தாக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

பேச்சு மூலமான தீர்வுக்கு நோர்வே தொடர்ந்தும் ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

இலங்கை தொடர்பான நோர்வேயின் கொள்கைகளில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவித்துள்ள அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரேய்மொண்ட் ஜொகான் சென், பேச்சு மூலமான அரசியல் தீர்விற்கான தமது நாட்டின் ஆதரவை வெளியிட்டுள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான நோர்வேயின் கொள்கை குறித்து சமீபத்தில் இடம்பெற்று வரும் பகிரங்க விவாதங்களைத் தொடர்ந்தே அந்நாட்டில் பிரதி வெளிவிவகார அமைச்சர் இக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறார் என அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

பிஞ்சுகள் முதல் பெரியவர் வரை சோகம் ததும்பிய தாங்கொணா நிலையில்

பல்லாயிரக் கணக்கில் திரண்டு வந்திருந்த மக்கள் அன்னைக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

தொல்லிப்பழை, ஜூன் 17

சைவ சமயத்தின் நிகழ்கால மறுமலர்ச்சித் தாயாக விளங்கிய ஆன்மீக அன்னை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு குடாநாட்டின் பல்லாயிரக்கணக்கான மக்கள் தெல்லிப்பழையில் திரண்டு சோகம் ததும்ப நேற்றுப் பிரியாவிடை கொடுத்தனர்.

நேற்று அவரது இல்லத்திலும் துர்க்கை அம்மன் ஆலய யாத்திரிகர் விடுதியிலும், இறுதி ஊர்வலத்திலும், மயானத்திலும் எனத் திரண்ட சுமார் இருபத்தையாயிரம் மக்கள் கூட்டம் இப்பிரதேச மக்களின் மதிப்புக்கும், அபிமானத்துக்கும், அன்புக்கும் உரியவராக அவர் எந்தளவுக்கு திகழ்ந்தார் என்பதனை வெளிப்படுத்தியது.

அன்னை தனது துர்க்கா மகளிர் இல்லத்தில் வளர்த்த பிஞ்சுக் குழந்தைகள் முதல் குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள், பெண்கள், முதியவர்கள், சாதாரண பொதுமக்கள், பிரமுகர்கள், உயர்அதிகாரிகள், கல்விமான்கள், சர்வமதப் பிரமுகர்கள் என்று எண்ணற்ற வகையினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

மீளாத் துயிலில்....

இறுதியாத்திரையில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் இறுதி நிகழ்வின் போது பதிவுசெய்யப்பட்டவை: (அ) அவரின் இல்லத்தின் இறுதிக் கிரியைகளின் போது (ஆ) துர்க்கையம்மன் யாத்திரிகர் விடுதியில் இடம்பெற்ற அஞ்சலிகளின் போது (இ) பிரமுகர்களின் அஞ்சலி உரைகளின் போது (ஈ) தேரில் இறுதி ஊர்வலமும் திரண்ட மக்கள் வெள்ளமும். (படங்கள்: டிலான், நேசன்)

பெரும் ஆன்மீக ஆலமரம் சரிந்துவிட்டது; அம்மா எங்களின் வரலாற்றுப் பெண்

அன்னை துர்க்காதுரந்தரிக்கு அஞ்சலிகள்

யாழ்ப்பாணம்ஜூன் 17

தமிழர் வாழவேணடும் ஆள வேண்டும் மக்கள் வாழ வேண்டும் ஆளவேண்டும் என்ற தந்தை செல்வாவின் சிந்தனை வழி வந்த ஆன்மீக ஆலமரம் சரிந்துவிட்டது. இந்த இழப்பை ஈடு செய்வது இயலாத ஒன்று - என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் இறுதி அஞ்சலி நிகழ்வு செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

அவர் தமது அஞ்சலி உரையில்

இன்றைய போர்ச் சூழலில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் போதெல்லாம் அன்னையை சந்தித்து நாட்டு நிலமை சம்பந்தமாக கலந்துரையாடிச் செல்வது வழமை. அப்போதெல்லாம் அம்மா சமூக நலனிலும் மக்கள் நலனிலும் அக்கறையுடன் என்னுடன் பேசுவார்.

கல்வித்துறையிலும், பொருளாதாரத்துறையிலும், சமூகத்துறையில் என்று ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை. இத்தகைய சேவையாற்றிய ஒரு பெருந்தகையை பல்கலைக்கழகத்தை இழந்து உள்ளோம் தமிழ் இனம் இழந்துள்ளது.

ஓர் ஆன்மீகத் தொண்டராக ஒரு சிறந்த தலைவியாக, ஒரு வழிகாட்டியாக, மாதரசியாக செயற்பட்ட இவரின் இழப்பை ஏற்றுக் கொள்வது ஈடுசெய்வதும் முடியாத ஒரு செயலாகும். இவரின் சேவையை வழி காட்டலை ஏற்று அவரின் வழி ஒழுகுவதே நாம் அவருக்குச் செய்யும் மரியாதையும் மதிப்புமாகும் - என்றார்.

துணைவேந்தர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தமது அஞ்சலி உரையில் தெரிவித்ததாவது:-

அம்மா ஒரு சமூகமறுமலர்ச்சிப் பெண்ணாக வாழ்ந்து காட்டியுள்ளார்.

அம்மா வரலாற்று ரீதியாக ஒரு பெண் தலைவியாக இனங்காணப்பட்டுள்ளார். அம்மாவின் உதவியால் பல்கலைக்கழகம், மருத்துவபீடம், பாடசாலைகள், அநாதை இல்லங்கள் என்று பல நிறுவனங்களும் பல அமைப்புகளும் நல்ல பயன் பெற்றுள்ளன.

அம்மா படைத்த வரலாற்றை நிர்வாகத்தை ஒழுக்கத்தை அனைவரும் பின்பற்றுவதும் அதன்வழி ஒழுகுவதுமே அம்மாவுக்கு நாம் செய்யும் மரியாதையாகும். அன்னை எமக்கு கிடைத்தமை பெறும் பேறாகும் - என்றார்.

ஆதீன முதல்வர்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தமது இரங்கலுரையில் அன்னையின் சேவை என்றும் மறக்கப்படக் கூடிய ஒன்றல்ல. அவர் தன்னை வருத்திச் சமூகத்திற்கு சேவையாற்றிய ஒரு பெருந்தகை. இவரை மறப்பது என்பது முடியாத ஒன்றாகும் என்றார்.

மேல் நீதிமன்ற நீதிபதி

யாழ்மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். ரி. விக்னராஜா தமது அஞ்சலி உரையில்;

யாழ் குடாநாட்டில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக மக்கள் பெரும் துன்பச் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் இந்த நெருக்கடி நிலையிலும் கூட அம்மா சிறந்த முறையில் தமது சேவைகளை மேற்கொண்டார்.

சமய நிறுவனங்கள் மக்கள் மத்தியில் நேர்மையுடனும் உண்மையுடனும் செயற்பட வேண்டும் எந்த [illegible] பணம் பொருள் வந்தாலும் அதற்குப் பற்றுச் சீட்டுஇட்டு உரியவருக்கு அனுப்பிவைப்பதில் அம்மா மிகவும் கவனமாகவும் அவதானமாகவும் செயற்பட்டவர்.

அம்மாவின் நேர்மையான உண்மையான உழைப்புமே இன்று அம்மாவை சர்வதேச மட்டத்தில் புகழ் மிக்க ஒருவராக மாற்றியது. அம்மாவுக்கு இன்று நாம் செய்ய வேண்டியது சைவசமயத்தின் புகழை சர்வதேசத்தில் நிலை நாட்ட வேண்டியதே - என்றார்.

வலிகாமம் வலயப் பணிப்பாளர்

வலிகாமம் கல்[illegible] வலயப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தமது இரங்கல் உரையில் கூறியதாவது:-

வலய மாணவர்கள் கல்விக்கென பெட்டியில் வைத்து பணத்தை வழங்கக் கூடிய ஒரு பெரிய வள்ளல் அவர். கொடுக்கப்படும் பணம் எதிர்காலச் சமூகத்தின் முன்னேற்றத்துக்கான அத்தியாயம் என்று நம்பியவர் அவர்.

ஆயிரக்கணக்கான குழந்தைகளின் தாயாக அம்மா திகழ்ந்துள்ளார். பலருக்கு பல்வேறு வழிகளிலும் வாழ்வு அளித்துள்ளார். பல ஆலயங்களுக்கும் முன்னோடியாகச் செயற்பட்டு சமயப் பணிக்கு வழி காட்டி உள்ளார் - என்றார். (அ-86)

அன்னையின் பணிகளைத் தொடர்வதே அவருக்குச் செய்யக் கூடிய மரியாதை

அனுதாப அறிக்கையில் அமைச்சர் டக்ளஸ்.

யாழ்ப்பாணம்ஜூன் 17

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னை விட்டுச் செல்லும் பணிகளை தொடர்ந்து செய்வதே நாம் அவருக்கு வழங்கும் சிறந்த மரியாதை ஆகும்- இப்படித் தெரிவித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவையொட்டி விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

சைவ சமயத்தினதும் தமிழ் இலக்கியத்தினதும் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்த அன்னை அவர்கள் துர்க்கா மகளிர் இல்லம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபம் போன்றவற்றை ஆரம்பித்து மக்கள் நலன் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு மக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் பாரிய உதவிகளை மேற்கொண்டு வந்துள்ளார். மக்கள் பணியே மகேசன் பணி என்பதை உணர்ந்து தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட அன்னையின் வாழ்க்கை வரலாறு அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

அன்னையின் பிரிவால் துயருறும் அன்னாரது உறவினர்கள் மற்றும் தமிழ் மக்கள் அனைவருடனும் நானும் எனது கட்சியும் தோழர்களும் சோகங்களைப் பகிர்ந்து கொள்கிறோம். அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் உரிய பணிகள் எமது வரலாற்றில் மறக்க முடியாதவை. அவர் விட்டுச் செல்லும் பணிகளை உரிய முறையில் தொடர்ந்து மேற்கொள்வதே அவருக்கு நாம் வழங்கும் சிறந்த மரியாதையாகும் இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

சட்ட பூர்வ காணிகளையாவது மீட்டுத் தருவதற்கு இயலுமா?

இலங்கையில் சிறுபான்மையினருக்கான அதிகாரப் பகிர்வில் அதிகம் சிரத்தை காட்டி வந்த சர்வதேச சமூகத்திடம் அதிகாரப் பகிர்வுக்கான முதல் நடவடிக்கை அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதே என்று கூறி, சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றி விட்டது இலங்கை அரசு.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அரசமைப்புத் திருத்தமாக நிறைவேற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப் படாமல் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்டுக் கிடந்த விவகாரத்தை -

அது கொண்டு வரப்பட்ட காலத்திலேயே அதைக் கடுமையாக எதிர்த்து ஆட்சேபித்த இலங்கையின் பிரதான தேசியக் கட்சி ஒன்றின் தலைமையிலான அரசே, மீண்டும் தூசு தட்டி எடுத்து -

அரசுத் தரப்புக் கட்சிகளை மட்டும் கொண்ட ஒரு கட்டமைப்பை, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு என்ற பெயரில் இயங்கவிட்டு, அந்தக் கட்டமைப்பின் சிபாரிசு போல தூக்கிப் பிடித்து -

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவது பற்றிய அறிவிப்பை அரசுத் தலைமை தடல்புடலாக விடுத்தது.

அந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு மாதங்கள் பல கடந்துவிட்டன. அதன் தொடர் நடவடிக்கையாகக் கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் என்ற கண்துடைப்பு நாடகமும், வடக்கில் மாகாண செயலணிக் குழு என்ற அதிகார நியமனமும் நடந்தேறிவிட்டன.

இனி, அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் எப்படி நடைமுறைப்படுத்தப்படப்போகின்றது என்பதை நாம் காண்பதுதான் மிச்சம்.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதுபோல இந்த அரசமைப்புத் திருத்தத்தின் செயலாக்கம் பற்றிய நடைமுறைச் சாத்தியத்தை முக்கியமான ஓரிரு விடயங்களின் அமுலாக்கம் மூலம் எடை போட்டு விட முடியும்.

வடக்கையும், கிழக்கையும் ஆட்டிப் படைக்கும் மிக முக்கிய சர்ச்சையாக இன்று விளங்குவது காணி விவகாரம்தான்.

தாயகப் பூமிக்கான பிணக்குத்தானே இன்று பல்லாயிரம் உயிர்களைக் காவு கொண்டு, கட்டுமட்டில்லா அளவு உடைமைகளை நாசமாக்கி, பேரழிவைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் பெரும் உள்நாட்டுப் போருக்கு வழி செய்து நிற்கின்றது.....?

ஆகவே, காணி விவகாரத்தை அரசும், அதன் உருவாக்கமான கிழக்கு மாகாணசபை மற்றும் வடக்கு மாகாண செயலணி ஆகிய அமைப்புகளும் எவ்வாறு கையாளப் போகின்றன என்பது முக்கியமாகின்றது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பான துறைகள் குறித்து மூன்று பட்டியல்கள் தரப்பட்டுள்ளன. ஒன்று - மாகாண சபைகளுக்குரியவை. அடுத்தது - மத்திய அரசுக்கு உரியவை. மூன்றாவது - இரண்டுக்கும் பொதுவானவை.

இவற்றில் மாகாணங்களில் இருக்கும் அரச காணிகள் பற்றிய விவகாரம் மாகாண அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தாலும், இந்த அதிகாரப் பட்டியல்களை நுணுக்கமாக ஆராயும் சட்டவறிஞர்கள் தெளிவான ஒரு விடயத்தைக் கண்டுகொள்வர்.

அதாவது, அரச காணிகள் பற்றிய அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருப்பதாக மேலோட்டமாக - பொத்தம் பொதுவில் - கூறப்பட்டாலும் அவ்விடயத்தில், எந்த அதிகாரப் பகிர்வும் இல்லவே இல்லை என்பதுதான் யதார்த்தம். எல்லா அரச காணிகளையும் மத்திய அரசினதும், ஜனாதிபதியினதும் இலச்சினை அனுமதியின்றி மாகாண சபைகள் ஏதும் செய்யவே முடியாது என்பதே சட்ட ஒழுங்கமைப்பு வடிவமாக உள்ளது.

ஆகவே, காணி அல்லது நிலம் தொடர்பான எந்த அதிகாரப் பகிர்வுமற்ற ஓர் ஏற்பாட்டையே பெரிய அதிகாரப் பகிர்வு நடவடிக்கையாக உலகுக்குக் காட்டி நிற்கிறது தென்னிலங்கை அரசு.

சரி. இது அரச காணி பற்றிய சர்ச்சை. அதை விட்டு விடுவோம். இனி வடக்கு, கிழக்கைத் தமது தாயகமாகக் கொண்ட தமிழர்களின் பாரம்பரிய வாழிடங்கள் பற்றிய காணிச் சர்ச்சையைக் கவனத்தில் எடுப்போம்.

வடக்கில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கபளீகரம் செய்யப்பட்டு, படைத் தரப்பினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதேபோல கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட சம்பூர் மற்றும் சுற்றாடல் பிரதேசங்களில் இருந்தும் பல்லாயிரம் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாக - பல தலைமுறை, தலைமுறைகளாக - சந்ததி சந்ததிகளாக - தாங்கள் வாழ்ந்து வசித்து வந்த நிலங்களிலிருந்து, தனியாருக்குச் சொந்தமான காணிகளிலிருந்து - தமிழர்களை இந்த அரசு விரட்டியடித்து அவற்றில் தனது படைகளை இருத்தியிருக்கின்றது.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் அரச காணிகள் மீதான உரிமை மாகாணசபைகளுக்கு இருப்பினும், அரச காணிகள் விடயத்தில் ஏதும் செய்ய முடியாமல் வலுவற்றிருக்கும் கிழக்கு மாகாண சபையும், வடக்கு மாகாண செயலணிக்குழுவும் ஆகக் குறைந்தது அந்தந்தப் பிரதேச மக்களுக்குப் பூர்வீக ரீதியாகவும், பரம்பரை ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் சொத்தாக இருக்கும் அவர்களது சொந்தக் காணிகளையாவது அவர்களுக்கு மீட்டுக் கொடுக்குமா? பலவந்தமாகத் தமது மண்ணிலிருந்து வேரடி மண்ணோடு தூக்கி வீசப்பட்ட இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் சட்ட ரீதியான உரிமையையாவது இந்த மாகாண நிர்வாகங்களால் மீட்டுக் கொடுக்க முடியுமா?

இந்த நிர்வாகக் கட்டமைப்புகள் மஹிந்த அரசின் நொண்டி வாத்துகளா? அல்லது பயன்தரும் நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய தகைமையும் திறமையும் கொண்டவையா? - இதனை அறிவதற்கான ஓர் அமிலச் சோதனையாக இந்தக் காணி விவகாரம் அமைந்திருக்கிறது.

இலங்கையின் தவறான நடவடிக்கை: சர்வதேச சமூகம் பாராமுகம் ஏன்?

நோர்வே 'பொங்கு தமிழ்' நிகழ்வில் விசனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

சர்வதேச சமூகம் அனைத்துத் தமிழ் அமைப்புகளையும் பயங்கரவாதிகளென முத்திரை குத்திவிட்டு, சிங்கள அரசின் தவறான செயற்பாடுகள் குறித்து நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் உள்ளதாக நோர்வேயின் ஆளும் தொழிற்கட்சியின் ஒஸ்லோ மாநகர சபை உறுப்பினரான டிரொன்ட் இஜன்ஸ்ரட் குற்றம் சாட்டியுள்ளார்.

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'பொங்கு தமிழ்' நிகழ்வில் வெளிப்படுத்தப்பட்ட தமிழர்களின் உணர்வுகளை நோர்வே அரசும் அங்கீகரித்து சர்வதேச அரங்கிற்கு அதனை எடுத்துச்செல்ல வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நோர்வே அரச பிரதிநிதிகள் பேச்சுகளுக்காக தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்ல முயற்சித்தனர். இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனினும், இலங்கை அரசு இந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டது. இலங்கை அரசின் இவ்வாறான நிராகரிப்புக்குறித்து சர்வதேச சமூகம் மிகவும் இலேசாகவே கண்டிக்கின்றது.

முழு உலகுக்கும் சொல்லப்பட வேண்டிய செய்தி

தமிழர் போராட்டம் சிங்களவர்களுக்கு எதிரானது அல்ல என்பதை உங்களது 'பொங்குதமிழ்' பிரகடனம் தெளிவாகச் சொல்கின்றது. அதே வேளை, தமிழ் மக்களைக் கொலை செய்து, இடம்பெயரச்செய்த அடக்குமுறை அரசிற்கு அது எதிரானது என்பதையும் தெரிவிக்கின்றது. முழு உலகிற்கும் இந்தச் செய்தி செல்ல வேண்டும்.

நீங்கள் ஒஸ்லோவில் சந்தோசமாக உள்ள போதிலும் உங்கள் ஊருக்குத் திரும்பிச் செல்வது குறித்து கனவுகாண்பதையும் உறவினர்களின் நிலைமை பற்றிய கவலை உங்களது மனதை ஆக்கிரமித்துள்ளமையும் நோர்வேயில் மிகக் குறைவானவர்களாலேயே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் உண்மை நிலைவரம் என்னவென்பது குறித்து நோர்வேயின் ஒரு சில அரசியல்வாதிகளே பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு சுதந்திர நாடு - சுதந்திரத் தமிழீழம் - அவசியம் என்பதைச் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமுமில்லை - என்றார்.

இதேவேளை இந்நிகழ்வில் பங்கு பற்றிய எரித்திரிய அமைப்பொன்றின் பிரதிநிதியான சாம் ஜரெட், எரித்திரிய மற்றும் தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு இடையிலான ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் போராட்டம் சுய நிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டது என்பதால் அது வெற்றி பெறுவதே இயல்பான முடிவு என அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டிலிருந்து கவிஞர்கள் புலமைப்பித்தன், அறிவுமதி போன்றவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (சி)

கந்தவனக் கடவையிலே சித்திரத் தேரேறி இன்று அருள்கூரப்பான் அழகு முருகன்

கலியுகவரதனாகிய கந்தப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துயர் போக்க எழுந்தருளி வீற்றிருக்கும் தலம் பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலயம்.

இந்த ஆலயத்தில் இன்று தேர்த் திருவிழா. அழகன் முருகன் அருட்காட்சி தரும் பொன்னான நன்னாள் இன்றாகும்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் கந்தன். அவனைக் கைதொழுதால் கடுவினைகள் யாவும் கதிரவனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும். முத்தமிழால் வைதாரையும் வாழவைப்



பொலிவோடு ஸ்ரீவள்ளி தேவசேனா சமேதராக ஷண்முகப் பெருமானாக எழுந்தருளி அடியார்களுக்கு அருட்

கைவினைப் பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன்17

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், நல்லூர் பிரதேசசெயலக தொழிற்றுறைத் திணைக்களமும் இணைந்து யுவதிகளுக்கான சிரட்டைக் கைப் பணி தொழிற்பயிற்சியினை வழங்கியிருந்தன.

இதன் இறுதி நிகழ்வாக பயனாளிகளுக்கு உபகரணம், சான்றிதழ் வழங்கலும், கண்காட்சி விற்பனையும் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (203)

பவன் முருகன். தமிழே வடிவான முருகன் தமிழரின் துயர் நீக்க இன்று சித்திரத் தேரேறி சிங்காரப் பவனி வருகின்றான்.

பொலிகண்டி மக்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள். இன்று நடைபெறும் தேர்த்திருவிழா திருவருட் பொலிவோடு அருள் சுரக்கும் விழாவாகக் கண்டு களிப்பதற்கு பூர்வ ஜென்மத்தில் புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாக விளங்குகின்ற கந்தப் பெருமான் இன்று அழகுத் தேரேறி ஆரோகணித்துத் திருவீதி வலம் வரும் அருள்மயமான ஆனந்தக் காட்சி காணக் கண்கோடி வேண்டும்.

எழுத்தில் வர்ணித்து வடிக்க முடியாத பேரழகன் முருகன் என்பது இன்று கந்தவனத்தில் நிரூபணமாகின்றது. தங்களுடைய நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்யும் வகையில் அடியார் பெருமக்கள்பலரும் அங்கப்பிரட்சணம் செய்தும் அடியழித்தும் கற்பூரச் சட்டி ஏந்தியும் காவடி எடுத்தும் வரும் அழகுக் காட்சி நெஞ்சை உருக்கும். எங்கு திரும்பினாலும் பக்தர் வெள்ளம் போல கரைதிரண்டு நிற்பர். நெற்றியில் திருநீற்றுடன் ''முருகா முருகா'' என்றும் ''கந்தனுக்கு அரோகரா'' என்றும் கோஷம் எழுப்பிய வண்ணம் நாலா புறமும் சுற்றிவரும் அன்பர் கூட்டம் முருக பக்தியை வெளிப்படுத்தி நிற்கின்றது.

கந்தவனக் கடவை இன்று விழாக் கோலம்பூண்டு கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டு வாழைகள், மகர தோரணங்கள், இளநீர், நுங்கு முதலியன இலங்க கண்ணுக்கு குளிர்ச்சி தரும் காட்சி ரம்மியமாக இருக்கும்.

அழகன் முருகனின் அருட்காட்சி திருக்காட்சியாகப் பிரகாசிக்க கந்தவனக் கடவையில் இன்று தேரோடும் வீதியிலே வினைகளை வேரோடு களைய ஆறுமுகப் பெருமானை இருகரங் கூப்பி நின்று சேவித்து அவனுடைய பேரானந்த மயமான திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

கந்தவனத்திலுறையும் கந்தவே குகனே
கார்த்திகேயா முருகா கடம்பா கதிர்வேலா
சந்ததமும் உனையே சதமென்று வந்தித்தோம்
சந்நிதியிலே நின்று உருகியே அழுகின்றோம்
பந்தவினை போக்கியே பக்தர்களைக் காத்திட
அழகுத் தேர் மீது அருட்காட்சி தாராயோ
எந்தவேளையும் கந்தவேளே சரணமென்று வந்தோம்
பேரோயச் செய்தே நிம்மதியைத் தருவாய்!
திருமுருகா சரணம் சரணம்!

சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

நாளை

ஆனி 04	18.06.2008 புதன்கிழமை
திதி:	பூரணை மு.இ. 11.39 வரை
நட்சத்திரம் :	கேட்டை பி.ப. 04.09 வரை
சுபநேரம் :	04.24 - 05.54
ராகுகாலம் :	11.34 - 01.24

உன் நினைவில் தாயே....

எண்ணமெல்லாம் உன் நினைவை எண்ணுதம்மா
கண்ணெல்லாம் உன் திருவுருவை தேடுதம்மா
கால்களெல்லாம் உன்சந்நிதி நாடுதம்மா
கைகள் எல்லாம் உன் பாதம் மலர் தூவுதம்மா
நாவெல்லாம் உன்நாமம் பாடுதம்மா
மெய்யெல்லாம் உன்னருளால் சிலிர்க்குதம்மா
வழக்கம்பரைத் தாயாரே தேரேறி வந்திடம்மா
வடம்பிடிக்கும் பக்தர் துயர் நீக்கிடம்மா!

சிவஸ்ரீ.சபா.வாகதேவக்குருக்கள் மகோற்சவ குரு.
(தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா இன்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய
எம் அன்னையின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய நதியா நகைமாடம்
உரிமையாளரும்,
ஊழியர்களும்
இல. 103, 73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தோற்றம்
07.01.1925

மறைவு
15.06.2008

[75415]

முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

அமரர் சுப்பிரமணியம் அம்பிகைபாகன்



அழகான உடலுக்கு உயிர் கொடுத்த
இறைவன் அந்த உடலுக்கு
அதிக ஆயுளைக் கொடுக்க
மறுத்து விட்டானா! மறந்து விட்டானா!
யாரிடம் நீதி கேட்பது என்று
உறவுகள் ஏங்கித் தவிக்கின்றன

காலம் என்கின்ற ஆற்கடலில் பயணம் செய்வதற்கு
உயர்ந்த மனிதனாகப் பிறப்பது நற்செயல் - பிறந்து
எல்லோருக்கும் நல்லவனாகவும் நண்பனாகவும் - இருந்து
உயர்ந்த மனிதனாகப் பிறப்பதுவும் நற்செயல்
இறக்கும் போது உலக நினைவோடு இறப்பவர்
மீண்டும் உலகில் பிறந்து வருவீரே!!

மலர்வு
28.10.1968

உதிர்வு
29.06.2007

'செல்வ அகம்',
ஆனைக்கோட்டை.

மனைவி,
பிள்ளைகள்.

[75403]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 2008

தேரேறி வரும் தேவியே! உன் அருட் புனலைப் பெருக்கி விடு!!

ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்பரந்து நிறைகின்ற அன்னை பராசக்தி, நயினையில் ஸ்ரீ நாகபூஷணியாக என்றும் கன்னியாக -அன்னையாக கருணை மழை பொழியும் தெய்வமாக திருக்கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள்.

''ஆதி சக்திகா மாதேவி பார்வதி நீலி துத்தியார் நீண் நாகபூஷணி" என திருப்புகழில் அருணகிரி சுவாமிகள் புகழ்ந்து போற்றிய ஆதிசக்தி, திருக்கோயிலின் கருவறையில் சுயம்பு மூர்த்தியாக, அருட் புனலால் ஆற்றுப் படுத்தும் அன்னையாக, அமர்ந்திருக்க, அம்பாளின் திருவுருவின் பின்புறத்தே விரிந்து பரந்து இருக்கின்ற ஐந்து தலை நாக உருவும் கொண்டு அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடதின் புவனத்தையாளும் பேரரசியாக பெருஞ் சக்தியாக விளங்குகின்றாள்.

இப் பிரபஞ்சமெங்கும் பரந்து சர்வ வியாபகமாய் ஆற்றல் தரும் சக்தியுறை திருத்தலம் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நாகவழிபாட்டோடு ஒன்றி பிணைந்த மிகத் தொன்மையானது. ''மண்ணதனில் ஐந்தை மாநீரின் நான்கை வயங்கெரியில் மூன்றை மாருதத்தில் இரண்டை விண்ணதனில் ஒன்றை விரி கதிரை தண்மதியை கண்ணாரக் கண்டேன்'' என அப்பர் சுவாமிகள் மண்டலங்கள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும்சக்தியின்பேராற்றலை ஓதி வைத்தார்.

கொடிய நாகங்களை மாலையாக அணிந்து அருள் வீச்சினால் பக்தரை ஈர்த்து அருள் சுரந்து வரமீயும் அன்னையை, வானாடர் கோனும் வணங்கி சாப விமோசனம் பெற்றுய்ந்தான் என்றும், மெஞ்ஞானம் வேண்டி வானப் பிரவேசம் செய்யப் புகுந்த போதி மாதவனும் தரிசித்து பெரும் பேறடைந்தான் என்றும் இலங்காதிபதி இராவணேஸ்வரனும் அவள் பணிந்து, துதித்து அருள் பெற்றான் என்றும் சொல்லப் படுகின்றது.

காரணமாகி கருணையாள் எவையும் நல்கி ஆருயிர் முழுதும் மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும்பூரணி அனைத்து உயிரையும் காப்பதால் போற்றிடுவார் உற்றதால் அடியவர் விரும்பும் யாவையும் ஈதலால், எக்கலையும் பெற்றதால் உலகொடு வானும்தொழுதலால் என்றென்றும் பற்றதாம் கருணை மழை பொழிதலால் எங்கள் நாகேஸ்வரி ஸ்ரீ புவனேஸ்வரி என வணங்கப்படுகிறாள் என்பது முன்னோர் கருத்தாகும்.

ஞானபூமியென்றும், தியான பூமியென்றும் மாதவத்தோரால் போற்றப்படு கிற்ன மணி பல்லவத் தீவில் குரை கடல் நடுவே திருக்கோயில் அமர்ந்து இலட்சோப இலட்ச மக்களை அலை அலையாய் ஈர்த்து புதுமைகளை செய்யும் நாகம்மை எங்முள்ள திருத்தலங்களுள் ஒப்பரி மகா சக்தி நிறையப் பெற்றது. பூநாகம் பூசித்ததாக பேசப்படுகின்ற பெருமையுடைய தாய்த் தெய்வம் உறைகின்ற தலம், மூர்த்தி, தீர்த்தமுடைய பெருஞ் சிறப்பைப்பெற்றது.

அம்மனின் அருளாட்சியை-தேவி யின் தெய்வ கடாச்சத்தை, மகத்துவத்தை ''தேவி வழிபாட்டின் அடிப்படைத் தத்துவம் எத்தகைய புரட்சிகளாலும் விந்தை காட்டும் விஞ்ஞானங்களினாலும் என்றும் அசைக்க முடியாதது'' என வீரத் துறவி விவேகானந்தர் கூறிப் போந்தார்.

சக்தியைச் சரண் புகுந்தால்

''சக்தியின் பாதமே சரணென்று நாம் புகுந்து பக்தியினால் பாடிப் பணிந்தால் கவலை பிணி தீர்ந்து விடும்'' என்று தமது பக்தியின் பயன் பாடாக ஆன்ம விடுதலையை வேண்டிநின்ற பாரதியின் பாவினுக்கு ஒப்ப சக்தியைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெற்றுய்யலாம். தவிரவும் பால் நினைந்தூட்டுபவள் தாய். அன்பு, கருணை, பாசம், பரிவு, பொறுமை, அரவணைப்பு போன்ற உயர் குணங்களைக் கொண்டு குலம் காக்கும் தாய்க்கு ஒப்பானது வேறெதுவும் இல்லை. அதனால் ஆதிகாலம் தொட்டு மிகவும் மேலாக தாய்த்தெய்வ வழிபாடு உயர்ந்து நிற்கிறது.

பல்வகைச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும், பாரம்பரிய மாண்பும் காப்பியத்தோடு இணைந்த பெருமையும் உடைய காவிய நாயகிக்கு இன்று தேர். காலாதிகாலமாக பக்தரை ஈர்த்து காட்சி கொடுத்து அருள் சொரியும் அம்மைக்கு இன்று தேர். வேண்டுவார் வேண்டும் வரங்களை ஈய்ந்து வக்கும் எம்பெருமாட்டி, விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியரோடு முப் பெரும் தேரில் உலா வரும் நன்னாள்.

நயினை நாகபூஷணியின் தனிச்சிறப்பாய் மிளிர்வது நாகபாம்பு உருவில் அன்பர்களுக்கு அருட்காட்சிகொடுத்து நுண்ணிய அருள் உணர்வையூட்டி நிற்பதாகும். இத்தகைய மாண்பினை, மெய்ப்பாட்டுடன் கூடிய பக்தியை, அபூர்வ பேராற்றலை வேறெங்கும் காண்பதரிது.

சமூகப் பண்பாட்டோடு பக்தி கலாசார விழுமியங்கள் என்பவற்றை தாங்கி கனவுகள்,நம்பிக்கை, நேர்த்திகள், நன்றி உணர்வுகள் எல்லாம் ஒன்றித்த நிலையில் மக்களின் வாழ்வியல் ஓட்டத்தில் அதீத சக்தி மிக்கதும், எத்தனையோ இயற்கை சீற்றங்களுக்கு எல்லாம் முகம் கொடுத்து, யுத்தக் கொடுமைகளுக்கும் இடம் கொடுத்து இன்றும் தன்னிறைவு பெற்று தனித்துவமாய் திகழ்வது நாகம்மையின் திருக்கோயிலும் திருத்தேர் பவனியுமாகும். தேரேறி வரும் தேவியே நாம் உன் மலர்ப் பாதங்களைப் பணிந்து வேண்டுவது ஒன்றேதான்!

கந்த- தியாகராசா

இன்று பல்வேறு சம்பவங்களினாலும் இடர்பட்டு துன்பமே வாழ்வாகிப்போன துயரத்தில், துயர மூடைகளைச் சுமந்து வாழும் மக்களுக்கு ஆறுதலை தந்துவிடு. ஊரிழந்து, உறவிழந்து, உடைமையும் இழந்து அநாதைகளாகஅகதிகளாக வாடும் எம் மினத்துக்கு விடிவைத் தந்துவிடு, புராணங்களும், திருமுறைகளும் போற்றிப் பெருமை பேசும் பேறுடைத் தெய்வமே திருத் தேரிலே திருவருள் நோக்கம் செய்து நிற்கும் இத் திருநாளில் பக்தகோடிகளின் மனோ நிலையை யுணர்ந்து வேண்டத்தக்கதை அறிந்து வேண்டும் பொருளைத் தரும் அம்மையே துன்பத்தைச் சுமக்கும் எம்மினத்தின் நம்பிக்கை ஒளிக் கீற்றாக இன்றும் துலங்கும் உன் அருளைத் தந்துவிடு. அருட்புனலால் துயரத்தை துடைத்து விடு. எல்லாரும் எல்லாரும் பெற்று ஏதிலிகள் என்ற பெயர் போய் நிம் மதியாய் இம்மண்ணில் வாழச் செய்துவிடு.

அடியார்களின் இன்னல்களை அகற்றிடு தாயே!
கட்டடப்பொருள்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
கஜமுகன்
ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 2833

இருளினை அகற்றி ஒளியேற்றிட தேரேறி வாரீரம்மா
நவ நாகரிக நங்கையர் விரும்பும்
அசல் 22 கரட் தங்கநகைகளுக்கு
நம்பிக்கையோடு நாடுங்கள்
உதயா ஜுவல்லர்ஸ்
இல. 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

துயரினை அகற்றி ஒளியேற்றிட தேரேறி வாருமம்மா!
மயூரா
அன்பளிப்பு அகம்
மொத்த, சில்லறை வியாபாரம்
14, நவீனசந்தை, (வெளிப்புறம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தேரேறி வந்து எமைக் காத்திடு தாயே!
சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளா? பட்டுவேட்டிகளா அல்லது
நீங்கள் விரும்பும் ஏனைய புடைவை வகைகளா? நாடுங்கள்
சீமாட்டி புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
மாங்கை சில்க்ஸ்
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

விஷ்ணு ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
மண்ணில் நல்லவண்ணம் உன் பிள்ளைகள் எல்லாம்
மகிழ்ந்திருக்க தேரேறி வரும்
எம் தாயே உன் அருள் பொழிந்திடு
22 கரட் தங்க நகைகள் ஒடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
விஷ்ணு ஜுவல்லறி
181, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
(வின்சர் தியேட்டர் முன்பாக)
T.P:077661819O

நாட்டில் சாந்தி, சமாதானம் மலர அருள்புரிவாயம்மா, தாயே!
G.S.M மேசைத் தொலைபேசிகள், கையடக்கத் தொலைபேசிகள், உதிரிப்பாகங்கள், KIT கார்ட், More கார்ட், Sim கார்ட் என்பவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். Hand Phone Unlock செய்து தரப்படும். அத்துடன் சிறந்த முறையில் பழுதும் பார்க்கப்படும்.
ஸ்ரார் செலூலர் அன் மஸ்ரி சொப்
இல.16, பஸ்நிலையம் , யாழ்ப்பாணம். தொ.பே: 0776660289, 0716169327

தேரேறிவந்து எமைக் காத்திடுவாய் தாயே!
சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும்சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ மாதவன் மொத்த, சில்லறை வியாபாரம்
இல.37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 2008

தேரேறும் தேவிக்கோர் விண்ணப்பம்

நயினைப் பதியின் நாகபூஷணியே
நல் வரங்கள் தரும் ஈஸ்வரியே
புதுமைகள் படைக்கும் பூரணியே
புவனமதை காத்தருளவேண்டுமிங்கே

மரக்கல வணிகனுக்கு உதவிய தாயே
மக்களின் குறை தீர்க்க வேண்டுமிங்கே
நிரந்தர சமாதானம் வரவேண்டும்
நின்னருள் எமக்கிங்கே தரவேண்டும்

பூக்கொண்டு நாகம் பூசிக்க
புதுமைகள் உலகினில் படைத்தவள்
தீக்கொண்டு பூமியை அழிப்பதை
தீவினில் நீ பார்த்திருப்பதா?

- ஏ.சங்குநாதன், திருநெல்வேலி.

தேர் அமர்ந்த காட்சி பாரும்!

அலைமோதும் அடியார் திருக்கூட்டம் பாரும்
அம்பிகையாள் திருத்தேர் பார்க்க வந்தார் பாரும்
கலைக்கோயில் மணித்தேரின் வண்ணம் பாரும்
கருணை பொழி அம்மன்எழில் என்னேபாரும்
தலைக்கோலம் அரவணிந்த சடையைப் பாரும்
தாவணியில் அழகு பாரும்; முத்தாரம் பாரும்
மலைக்கோயில் கைலாசம் விட்டு நீங்கி
மாதுமையாள் தேர் அமர்ந்த காட்சி பாரும்

- கா.கார்த்திகேசு.

விடிவுதர விரைந்தோடி வா!

தேரேறி வந்தெங்கள்
குறையெல்லாம் போக்கிடம்மா
துடிதுடித்துச் சாகுமெங்கள்
சோதரரைக் காத்திடம்மா
கொடியவர்கள் கொட்டமதைக்
கூண்டோடு அழித்திடம்மா
கொடிதான போரதனால்
குடிநாச மாகுதம்மா
விடிவொன்று தந்திடவே
விரைந்தோடி வாருமம்மா
முடிவொன்று காண்பதற்கு
முறையொன்று காட்டிடம்மா

- வ. யோகானந்தசிவம்.

நல்லாளே நயினாதீவு நாயகியே நாகபூசணியே!
செல்வமகளே செப்புவாய், எம்மினம் வாழ- வழி

உங்கள் ஒடர் நகைகளை குறித்த தவணையில் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

(சி/552312)

சிறி மீனாட்சி தங்க மாளிகை

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விதியை நொந்து வேகுகின்றோம் விரைந்து வந்து காத்திடம்மா....

தங்க நகையுலகில்.... நம்பிக்கை, நாணயத்துடன் நித்திய சேவையிலும் நியாயமான முறையாலும் நன்நம்பிக்கை பெற்று, நகையுலகிலேயே தனியுலகு படைத்து நிற்கிறது...

ஒடருக்கு நகைகளை அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

நித்திய கல்யாணி நகை மாளிகை

205/4, கஸ்தூரியார் வீதி, (ராஜா கட்டத்தொகுதி) யாழ்ப்பாணம்

(சி/562314)

இன்னல்கள் போக்கி இன்பங்கள் தந்திட வந்திடம்மா தேரேறி

மைதிலி நகைமாடம்

Maithily Nagai Madam

Yarl Maithily Jewellers

தங்க நகை வியாபாரி

யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்

89 V, Kasthuriyar Road, Jaffna.

157J, Sea Street Colombo -11.

இன்னல்கள் போக்கிட எம் தாயே எங்களைக் காத்திடத் தேரேறு.....

VSP ஒத்த ஒடர்

பரிமளா ஸ்ரோர்ஸ்

உணவுத் தேவைகளுக்குச் சுத்தமாகத் தயாரிக்கப்படுவது

(சி/552317)

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தேரேறும் தேவியே நயினை நாகபூசணி எம் துயர் தீர்க்க ஓடிவா தாயே!

உலகின் எந்தப்பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் உள்ளூர், வெளியூர் தொலைத்தொடர்பு வசதிகள், லெமனேற்றிங், பிறின்ரிங், கிறபிக்ஸ் டிசைனிங், கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

CALLING CARD 3/=

விரைவான பணப் பரிமாற்றத்திற்கு WESTERN UNION பணப் பரிமாற்றம்

சகல விதமான SLT MAXtalk SLT NetCard

Internet Browsing

கணனி சம்பந்தமான சகல பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

Warranty 1 & 2 Years With Service

திருமுருகன் கொம் நெற்

250, கிங்ஸ்லி வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ் சிக்னல் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

FedEx Express

நம்பகரமான துரிதசேவை

(சி/552313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்மராட்சியில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 15 பேருக்கு மின்சார சபையால் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோருக்கு மின்பொறியியலாளர் அலுவலகத்தில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மின்சார சபை உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது அண்மையில் 15 இற்கும் மேற்பட்டோர் பிடிபட்டனர்.

இவர்களுக்கு சுன்னாகம் மின்பொறியியலாளர் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வரணி, சுட்டிவேரம் கண்ணகை அம்மன் கோயில் உற்சவத்தின்போது சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற நான்கு வர்த்தகர்கள், மந்துவில் மேற்கு, மீசாலை மேற்கு, மீசாலை கிழக்கு, மிருசுவில் வடக்கு, குடமியன், சாவகச்சேரி சப்பச்சிமாவடி ஆகிய இடங்களில் 12 குடியிருப்பாளர்கள் ஆகியோர் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற வேளையில் அகப்பட்டுக் கொண்டனர்.

மின்சாரம் பெற பயன்படுத்திய உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

மின்சார சபையினால் வீட்டுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டவரும் இவர்களின் அடங்குவர். (203-207)

கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 2ஆயிரத்து 527 பேருக்கு ஆசிரிய நியமனங்கள்

கொழும்பு, ஜூன் 17

கல்வியியற் கல்லூரிகளில் 2005 - 2007 கல்வியாண்டில் கற்று வெளியேறிய 2527 பேருக்கு இந்த வாரம் முதல் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளிலும் மாகாணப் பாடசாலைகளிலும் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

846 தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் உட்பட இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நாட்டிலுள்ள 17 கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 2527 பேரில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு தேசிய பாடசாலைகளுக்கு ஏனையவர்களுக்கு மாகாணப் பாடசாலைகளுக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

சங்கானை மண்டிகைக் குளப்பகுதிகளில் பாதீனியச்செடி ஆக்கிரமிப்பு

சங்கானை, ஜூன் 17

சங்கானை மண்டிகைக் குளத்தை அண்டிய வயல் மற்றும் காணிகளில் பாதீனியச் செடியின் ஆக்கிரமிப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கமநல சேவைத் திணைக்கள அனுசரணையுடன் இப்பகுதியில் பாதீனியம் அழிக்கப்பட்டது.

எனினும் இதற்குப் பின்னர் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படாததால் மீண்டும் பாதீனியம் அப்பகுதிகளை ஆக்கிரமித்து வருவதாகக் கூறப்படுகிறது. (203-29)

செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் இரத்ததானம் செய்தனர்

நல்லூர், ஜூன் 17

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவின் கோப்பாய் கிளையைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்தனர்.

யாழ்.செஞ்சிலுவைச் சங்க பரப்புரை உத்தியோகத்தர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் அச்செழு கிராமததைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் இரத்தம் வழங்கினர்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் எஸ்.குகராசாவும் இதில் கலந்து கொண்டார். (203-111)

சமய சந்திகளில்

நல்லூர், ஜூன் 17

வண்ணை நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று அம்பாள் தேருக்கு எழுந்தருளுவார்.

நாளை காலை 8 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட தீர்த்த மண்டபத்தில் தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (203-111)

* * *

குடத்தனை, ஜூன் 17

புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் அலங்காரத் திருவிழா நிறைவு பெறும். (203-78)

* * *

வலி.தென்மேற்கு, ஜூன் 17

பண்டத்தரிப்பு, காலையடி ஞானவேலாயுதசுவாமி ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு நடைபெறவுள் ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும். (203-135)

* * *

வலி.தென்மேற்கு, ஜூன் 17

பண்டத்தரிப்பு காலையடி தெற்கு முத்தர்கேணி ஞானவைரவர் ஆலய வருடாந்த கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் சங்காபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற வுள்ளன. (203-135)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 17

கைதடி, சச்சிதானந்த ஆச்சிரம மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய 1008 கலச சங்காபிஷேகமும் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் மகா கும்பாபிஷேக மலர் வெளியீடும் எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

காலை 7 மணிக்கு கலச சங்காபிஷேகமும் முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் மலர் வெளியீடும் இடம் பெறும். (203)

புலோலி கூ.சங்கத்திற்கு புதிய நெறியாளர் குழு

யாழ்ப்பாணம், ஜூன் 17

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கென புதிய நெறியாளர் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நடைபெற்று புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (202)

இதழியல் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 17

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இதழியல் துறை டிப்ளோமா மாணவர்களின் முதல் பிரிவினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஜூம்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள பயிற்சி நிலையத்தில் இடம்பெற விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

பண்டத்தரிப்பு வைத்தியசாலையில் ஏற்புநோய் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு

வலி.தென்மேற்கு, ஜூன் 17

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் ஏற்பு நோய்த் தடுப்பு ஊசி மருந்துக்கு கடந்த ஒரு வாரமாக தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் இங்கு ஏற்புநோய் தடுப்பு ஊசி மருந்து ஏற்ற வரும் நோயாளர்கள் திரும்பிச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது. (203-135)

ஐஸ்கிறீம் மற்றும் மென்பான வகை உற்பத்தியாளர்கள் முதலாம் திகதிக்கு முன்னர் உரிமப்பத்திரம் பெற வேண்டும்

சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவுறுத்து

குருநகர் ஜூன் 17

யாழ்.மாவட்டத்தில் ஐஸ்கிறீம், யூஸ், மற்றும் மென்பானங்களை உற்பத்தி செய்வோர் மற்றும் விற்பனை செய்வோர் தமது உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதற்கான உரிமப்பத்திரங்களை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்பாகப் பெற்றுக் கொள்ளவேண்டும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மென்பான உற்பத்தியாளர் மற்றும் வியாபாரிகள் ஆகியோருக்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 11ஆம் திகதி யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தொற்றுநோய்கள் பரவாது தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிப்பு

இக்கூட்டத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், சிரேஷ்ட பொதுச்சுகாதார பரிசோதகர்கள், யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக உணவு மருந்துப் பரிசோதகர் எஸ்.மகாதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோது டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:- நீர் மூலம் நோய்கள் உருவாகுவதில் யாழ். மாவட்டம் இலங்கையில் முன்னணியில் உள்ளது.

யாழ்.மாவட்டத்திலேயே நெருப்புக் காய்ச்சல் அதிகமாகப் பரவுகிறது

இலங்கையில் உள்ள 24 மாவட்டங்களில் யாழ்.மாவட்டத்திலேயே நெருப்புக் காய்ச்சல் அதிகமாக உள்ளது என கடந்த பதினைந்து வருடகால மருத்துவப் புள்ளி விவரத்தில் தெரிய வந்துள்ளது.

இந்த நோய் பரவுவதை கட்டுப்படுத்த நாம் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மக்கள் நோயால் பாதிக்கப்படுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ்.மாவட்டத்தில் ஐஸ்கிறீம், யூஸ் மற்றும் மென்பானங்கள் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படுகிறது. இது தொடர்பாக பொது மக்கள் எமக்கு முறைப்பாட்டுக் கடிதங்களை அனுப்புகிறார்கள். நீதித்துறையினர் இது தொடர்பாக எமது பணிமனையுடன் தொடர்பு கொள்ளுகிறார்கள்.

சுகாதாரமற்ற நீர் மற்றும் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் உணவுமூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவது எமது முக்கிய நோக்கம். உங்கள் வியாபாரத்தைக் குழப்புவது எமது நோக்கமல்ல. தரமற்ற முறையில் தயாரிக்கப்படும் உங்கள் உற்பத்திகளை நல்ல முறையில் திருத்தி தரமாக மக்களுக்கு வழங்க எம்மால் உங்களுக்கு அவகாசம் தரப்படும். உணவில் துப்பரவு, சுகாதாரம் இருக்க வேண்டும்.

உணவு தயாரிக்கும் நிலையங்கள் மற்றும் விற்பனை செய்யும் நிலையங்கள் துப்பரவாக சுகாதாரமாக வைத்திருக்கப்பட வேண்டும்.

உங்கள் பிரிவில் இயங்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆகியோர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப நடந்து தரமான உணவை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுங்கள் - என்றார்.

மென்பானங்களை உற்பத்தி செய்வதற்கான தேவைகள்

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக உணவு மருந்துப் பரிசோதகர் எஸ்.மகாதேவன் கருத்துரை வழங்கும் போது தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

*ஐஸ்கிறீம், யூஸ் தயாரிப்பதற்கு சரியான கட்டடம் இருக்க வேண்டும். நிலம் துப்பரவாகவும் போதிய இட வசதியுடையதாகவும் காற்றோட்டம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

*மென்பானம், ஐஸ்கிறீம், யூஸ் தயாரிப்பதற்கு நிரந்தர கட்டடம் இருக்க வேண்டும். இங்கு எவரும் குடியிருக்கக் கூடாது.

*அடிக்கடி நிலத்தைக் கழுவி துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

*களஞ்சிய அறை போதிய இடவசதி உடையதாக இருக்க வேண்டும்.

*மென்பானம் தயாரிப்பவர்கள் தமது போத்தல்களை கழுவ தொட்டிகள் அமைத்து வைத்திருத்தல் வேண்டும்.

*பாவிக்கப்படும் போத்தல்களை சுத்திகரிப்பது முக்கியமானது. சரியான முறையில் போத்தல்கள் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

*வேலை செய்யும் வேலையாட்கள் தமது ஆடைகளை மாற்ற வசதியான அறை இருக்க வேண்டும்.

*உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சுத்தமான தொற்றுநோய்க் கிருமிகள் இல்லாததாக இருக்க வேண்டும்.

*உற்பத்திபிலீடுபடும் தொழிலாளர்கள் தமது கைகளை கழுவிச் சுத்தமாக இருக்க உற்பத்தி நிலையத்தில் சவர்க்காரம் இருக்க வேண்டும்.

*இவர்களது நகங்கள் வெட்டித் துப்புரவாக இருக்க வேண்டும்.

*இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் தூய வெள்ளைநிற உடுப்புகளை அணிவதுடன் தலை மறைப்புக்களும் அணிந்திருக்க வேண்டும்.

*தொழிற்சாலையில் நீரடைப்பு மல கூடம் இருக்க வேண்டும்.

*உற்பத்தி ஸ்தானத்தில் நாய், பூனை, மற்றும் பறவைகள் இருக்கக் கூடாது.

*உற்பத்தி செய்யப்படும் உணவில் சேர்க்கைகள் குறிப்பிட்ட அளவிலேயே பாவிக்கப்பட வேண்டும். சில வகையான சேர்க்கைகளை உணவில் சேர்ப்பதனால் புற்றுநோய் உருவாகலாம் என சந்தேகப்படுவதனால் அனுமதிக்கப்பட்ட சேர்க்கைகளையும் வர்ணங்களையும் மட்டுமே பாவிக்கலாம்.

*தயாரிக்கப்பட்ட அல்லது பொதி செய்யப்பட்ட உணவுப் பொருளில் சுற்றப்பட்டுள்ள உறைகளில் என்ன வர்ணம் சேர்க்கப்பட்டுள்ளது என்பது பற்றி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் பெயர் என்ன, என்ன பொருள்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது என்ற விவரம் லேபிலில் இரண்டு மொழிகளில் தடித்த எழுத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

உற்பத்தியாளர் பெயர் முகவரி அவசியம்

*உற்பத்தியாளர் பெயர், முகவரி, உற்பத்தித் திகதி, பொருளின் காலாவதித் திகதி ஆகியவை இரண்டு மொழிகளிலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

*நெல்லிகிறஸ் செய்வதாயின் நெல்லியே பயன்படுத்த வேண்டும். நெல்லி எஸன்ஸ் பாவித்து நெல்லிகிறஸ் தயாரிக்க முடியாது.

*ஒரு பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்கள் யாவும் அந்தப் பிரதேசத்திலேயே விற்பனை செய்யப்பட வேண்டும்.

*விற்பனை செய்யப்படும் பொருள்களில் தயாரிப்பாளரது பெயரே குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

*உற்பத்தி செய்பவரும் பொருளை விற்பனை செய்பவரும் தமது பொருளை உற்பத்தி செய்ய அல்லது விற்பனை செய்தவற்கான அனுமதிப்பத்திரங்களை அவர் வசிக்கும் பிரதேச உள்ளூராட்சி மன்றத்திலிருந்து பெற்றிருக்க வேண்டும்.

*கோயில் திருவிழாவிற்கு தற்காலிக கடைகளை தமது பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசத்துக்கு சென்று போட்டு வியாபாரம் செய்வதாயின் உரிய உரிமப்பத்திரத்தை அமைக்கப்படும் கடையில் ஒட்டுதல் வேண்டும். (203-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
அருட்செல்வவினாயகம் திலகவதி
(நிரந்தர தர்மகர்த்தா, முன்னாள் மனேச்சர் வெல்லிங்கத் தோட்டப் பிள்ளையார் கோயில், துன்னாலை கிழக்கு)

தோற்றம் 19.09.1921 மறைவு 03.07.2001

திதி: சதுர்த்தசி 17.06.2008

எங்கள் அன்பின் திருவுருவே ஆசை அம்மாவே!
உங்களை விட்டுப் பிரிந்து ஏழாண்டுகள் கழிந்தனவே!
உங்கள் திருவுருவம் எங்கள் முன் காட்சியளிக்காதோ?
உங்கள் அன்பு வார்த்தைகள் எங்கள் காதில் ஒலிக்கின்றதே!
நீங்கள் வானுறையும் தெய்வமாய் வழிநடத்துவாயம்மா.

தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு. (75340) பிள்ளைகள்.

இதயவீணை ஓய்ந்த எட்டாமாண்டு நினைவஞ்சலி

திருமதி
நாகமுத்து சிதம்பரப்பிள்ளை

மண்ணில் மலர்ந்தது 14.04.1914
விண்ணில் உறைந்தது 17.06.2000

திதி: பூர்வபக்க சதுர்த்தசி 17.06.2008

அன்னையே எங்கள் அழகுமிக்க ஓவியமே
ஆண்டுகள் எட்டானாலும் ஆறுமா எந்துயரம்?
கண்கண்ட தெய்வம் அம்மா காலமெல்லாம் துதிக்கின்றோம்
காசினியில் வாழ்வாங்கு வாழ்ந்துவிட்டுச் சென்றீரே!

கோயில் சுனை சூழக் கோலமிடும் ஊரினிலே
குன்றா இளமையுடன் குதூகலமாய் உழைத்தீரே!
இல்லறமாம் சோலையிலே ஏற்றிவைத்த தீபமம்மா!
இகமதிலே உங்களை நாம் எங்கே தான் காண்போமா?

கண்ணின் மணியே கருணைமிக்க காவியமே!
கருத்தில் நிறைந்தீரே கனிமொழியே தண்மதியே!
பொய்மைமிகு இவ்வுலகில் புண்ணியங்கள் செய்தீரே!
போகுமிடமெல்லாம் பூமேனி தொடருவதேன்?

செல்வச் செழிப்புடனே சீர்பெறவே வழிவகுத்தீர்!
சிந்தை உருகிறதே உங்கள் செயற்றிறனை எண்ணிடவே!
அன்பின் உறைவிடமே எங்கள் அறிவுமிக்க ஆரமுதே!
அரன் அடியே தஞ்சமென்று ஆவலுடன் போனீரோ!

(75317)

குடியிருப்பு, மந்துவில் வடக்கு, கொடிகாமம்.
என்றும் உங்கள் நினைவில் வாழும்: குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 24 ★ 08 ★ 1947
உதிர்வு 18 ★ 05 ★ 2008

திருமதி குமாரகுலசிங்கம் (தேவா) மீனலோஜினி

கடந்த 18.05.2008 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.06.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் மேற்கு, உடுவில். (75343)
தேவா (கணவர்), பிள்ளைகள்.

கச்சாய் கடலேரியில் மீன்பிடிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன்17

கச்சாய் கடலேரியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கச்சாய், கெற்பேலி ஆகிய கடலேரியில் கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டதாகவும், கோயிற்குடியிருப்புப் பகுதி கடலேரியில் மீன்பிடிக்க விரைவில் அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் படை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியதையடுத்து கடலேரியில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

தவறிவிட்டது

அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில் என்னும் முகவரியுடைய நளினி கிருஷ்ணானந்தமூர்த்தி என்பவரின் தேசிய அ.அட்டை (865662505V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப் பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும் (75349)

பிரார்த்தனை செய்கிறோம்

சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

எமக்கு வழிகாட்டியாக இருந்த அம்மாவின் ஆத்மா திருவருளோடு இணைந்திருந்து எமக்கு என்றும் வழிகாட்டப் பிரார்த்தித்து இன்று மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமானுக்கு நண்பகல் 12 மணிக்கு அம்மாவின் ஆத்மா சாந்தி பெற விசேட பூசைகள் நிறைவேற்றிப் பிரார்த்திக்கின்றோம்.

இ.குழந்தைவடிவேலு J.P.
மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்
ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம் - கைதடி. (75404)

கண்ணீர் அஞ்சலி

சைவத்தமிழ் உலகின் அகல் விளக்காக விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள் அம்பாள் திருவடியில் சேர்ந்தமையை அறிந்து எனது பணிவான அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

நியூரோன் எலக்ரிக்கல்
440, 442, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/553359)

கண்ணீர் அஞ்சலி

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

ஸ்ரீதுர்க்காதேவியின் அடிதொண்டனாக இருந்து சமூகப் பணியாற்றி, சைவத்தையும் தமிழையும் வளர்த்து,பார்போற்ற உத்தமராய் வாழ்ந்த அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சுந்த ஆஞ்சநேயரை பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோயில்,
மருதனார்மடம், சுன்னாகம். (75402)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.கு.ஜெகநாதன் (அதிபர்)
(B.A., Dip. in Edu.SP.Trd. Science)
தவிசாளர் - மத்தியஸ்த சபை, சண்டிலிப்பாய்

எமது வித்தியாலயத்தின் அதிபர் 11.06.2008 அன்று மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையைப் பாராட்டுவதுடன் சகல சௌபாக்கியங்களையும் பெற்று அவர்களின் பணி சிறக்க வாழ்த்தி நிற்கின்றோம்.

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி. (சி/553343)
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கபஸ்பம், கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கலவனைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடை தலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் கருங்குதல், மீனவடுதல் போன்ற சரும தோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.
1வாரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேர் விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

31ஆம் நாள் நினைவஞ்சலி

திங்கள் ஒன்று கடந்த நினைவுகள்
அமரர்
முருகையா சுதாகரன்

தோற்றம் 06★01★1958
மறைவு 18★05★2008

திதி: பூர்வபக்க சதுர்த்தசி 17.06.2008

ஆருயிரே!
எப்படி அழைத்தாலும் பிள்ளை பிள்ளை
என்று என்னைச் சுற்றிவரும் செல்லமே
திக்குத் தெரியாத இந்தியாவில்
தட்டித் தனியே என்னைத்
தவிக்கவிட்டு மாயையிடம்
சென்றீரோ அய்யனே
என்றும் ஈரவிழிகளுடன்
உம் வரவுக்காகக் காத்திருக்கும்.

சிவபதி, கைதடி மேற்கு. (75316)
அன்புத் துணைவி கு.பிரபாலினி.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டகரண அழைப்பும்

மலர்வு 12 . 04 . 1937
உதிர்வு 19 . 05 . 2008

திருமதி சின்னையா தெய்வானை

பாசத்தில் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசமுடன் இணைந்த
இனிய உங்கள் முகம் எங்கள்
நெஞ்சை விட்டகலாது.

கடந்த 19.05.2008 சிவபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம் சின்னையா தெய்வானை அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (17.06.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதி றோட், துரையப்பா அவெனியூ, பத்தமேனி, அச்சுவேலி. (75299)
தகவல்: குடும்பத்தினர்.

மாபெரும் தள்ளுபடி விற்பனை

SATS-TECH நிறுவனம் யாழ். நகரில் இல.10/11, ஸ்ரான்லி வீதியில் (மிட்டாஸ் கடை சந்தி) விற்பனை நிலையத்தை இன்று (16.06.2008) திறந்து வைக்கிறது. இதனை முன்னிட்டு 30.06.2008 வரை தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுக விலையில்!

DISH TV package I
MAXI 3 மாதம் அல்லது Freedomplus 6 மாதம்
இலவச பக்கேஜ்
குபாம் 8250/=

package II
MAXI 5 மாதம் அல்லது Freedomplus 12 மாதம்
இலவசம் :-
குபாம் 10250/=

package III
MAXI 11 ½ மாதம் அல்லது Freedomplus 18 மாத
இலவசத்துடன்
குபாம்13500/=

dishtv

★ மற்றும் டிஸ் TV க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்தித் தரப்படும்.
★ அனைத்து கேபிள் TV உபகரணங்களும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும்.

மேலதிக விவரங்களுக்கு:
இல.10/11, ஸ்ரான்லி வீதி, [மிட்டாஸ் கடைச் சந்தி], யாழ்ப்பாணம்.
SATS-TECH ENGINEERS
Phone :- 021-222 5908

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 2008

தேரேறிவரும் அம்மையே

நலம் தரும் நயினை நாகபூஷணி அம்மையே
நமக்கருள தேரேறி வருகின்றாயே
கலங்க வைக்கும் போராலே கண்ணீரோடு
கவலையுற்று அகதியானோர் பலருண்டிங்கு
நிலவுலகில் நிம்மதியாய் நாங்கள் வாழ
நித்தலும் நினதருளை வேண்டுகின்றோம்
பலமான சமாதானக் கொடியை நாட்டி
பதித்திடுவாய் அமைதியினை நிலையாயிங்கு

குளப்பிட்டி. க. அருமைநாயகம்.

இருள் அகற்றிடுவாய்

நெய்தல் நிலமிருந்து நிழல்அளிக்கும்
அற்புதமலரே!
நேசமுடன் உனை நாடித்தேடி வரும் உன்
அடியார்கள் அல்லல் அகற்றி
இன்புடனிருக்க இன்னருள் புரிவாய் தாயே!
பக்குவமாய்ப் படகேறிப் பக்தியுடன்
உன்பதி அணுகும் அடியார்களின்
அவலங்களை ஆரத்தழுவிக் கேட்டு
அருள் அளிக்கும் அன்புத் தாயே!
உன் அடி சரணம்அம்மா!

பவானி- ஆனைக்கோட்டை.

மாநிலம் அமைதிபெற அருள்புரிவாய்

நயினை நாகபூஷணியே நமக்கருள வேண்டுமம்மா
நானிலத்தோர் நவின் றேத்தும் நாகேஸ்வரித் தாயே
கயிலை மலைநாதனின் காதலிப்பெண் உமையே!
காத்தருள வேண்டும் எம்கடுவினை அகற்றியே
குயிலைப்போலினிய குரலுடையாளே கூத்தாடும் ஈசன்
இடப்பாகம் அமர்ந்த இறைவியே அன்னபூரணியே!
மயிலை வாகனமாய்க் கொண்ட முருகனின் தாயே
மாநிலம் அமைதிபெற அருள்புரிவாய் அம்மா!

சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன்

இன்னல்கள் போக்கிட எம் தாயே எங்களைக் காத்திட தேரேறி வாருமம்மா....

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

தலைமை ஸ்தாபனம்:
இல.13, 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/552329)

கிளை ஸ்தாபனம்:
47, பெரியகடை வீதி யாழ்ப்பாணம்.

தரம் நாடுவோர்
தவறாமல் நாடுமிடம்:
அமைதி நிலைநிறுத்தி வளமான வாழ்விற்கு
வழிகாட்டிடுவாய் அன்னையே!
விக்னேஸ்வரா நகைப்பூங்கா
205/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நாகபூசணியே உன் பாதம்
சரணடைந்தோம்.
காத்திடுவாய் எந்நாளும் நீயே!
சிறி சிவாஞ்சனா நகைமாளிகை
நவீன அழகிய நகை ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நாகபூசணியே உன் பாதம் சரணடைந்தோம்.
தேரேறி வந்து எங்களைக் காத்திடுவாய்
எந்நாளும் நீயே!
PC PARK (PVT) LTD.
Pointpedro Road,
Nelliyadi.
T.P:- 0212264828
Fax:- 0212229581

633, K.K.S.Road, Jaffna,
T.P.:- 021 222 9581
Fax:- 021 222 9581

தாயே நயினை நாக பூசணியே வருக எம் துயர் துடைக்க
அருள்க பல நன்மைகளை...
D.G. Brasserie
D.G. BRASSERIE
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
யாழ். மாவட்டத்துக்கான
ஏகவிநியோகஸ்தர்கள்:
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
Bra
* திருமணப் பட்டுப்புடைவைகளுக்கும்
* நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
* சிறுவர், சிறுமியர்களுக்கான சிறந்த றெடிமேற் ஆடைகளுக்கும்
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
துணை நிறுவனம் **யோகாஸ் ஆடையகம்**
18A, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: 17, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

அன்னையே... அம்மாவே... உன்பாதம்
சரணடைந்தோம் எங்களைக் காத்தருள
இன்று தேரில் ஏறி ஓடிவா அம்மா
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும்
பல் கட்டுமிடமும்
கிளை: இல.91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில்.
இல.86, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2486

நாகபூசணியே உன் பாதம் சரணடைந்தோம்; காத்திடுவாய் எந்நாளும் நீயே!
பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல் ரகங்கள்,
குறிப்பிட்ட தவணையில் தாமாகவும்
நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்
காலத்தால் அழியாத கற்பனைக்கும்
எட்டாத எழில் குன்றா அற்புதப் படைப்புகள்
சாரங்கா நகை மாடம், சாரங்கன் நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
107, 109, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு: இல.45, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த சாரங்கன் நகைமாடம் தற்பொழுது இல. 107, 109, மின்சார நிலைய வீதியில் இயங்குகின்றது.

Manufacturers of
Gold Jewels
இன்னல்கள் போக்கிடும் எம் நயினைத் தாயே
தேரேறி வருக... வருக....
கிருஷ்ணா நகை மாளிகை
Krishna Jewellary
கிளை நிறுவனம்
கிருஷ்ணா அடகு கடை,
370, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனை செய்கின்றோம்

சைவம், தமிழ் வளர்த்த அன்னை
சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

சைவத்தையும், தமிழையும் வளர்த்த அன்னை, துர்க்கை அம்மன் திருவடியில் அமைதியடைந்த செய்தி, எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்துகின்றது. எமக்கு அன்னை ஆற்றிய அருட்பணிகள் சொல்லில் அடங்கா. அன்னையின் புண்ணிய ஆத்மா, அம்பாளின் திருவடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீமத்கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்,
மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி. (75417)

கண்ணீர் அஞ்சலி

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெரும் தொண்டாற்றிய அன்னை
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நம்பிக்கை பொறுப்பாளர் சபை,
கோண்டாவில் ஆசிய அரசடி விநாயகர் ஆலயம்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (75410)

கண்ணீர் அஞ்சலி

சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுக்க அரும்பணியாற்றியதுடன் நலிவுற்றவர்களுக்கு உதவுவதில் தன்னையே ஈடுபடுத்திய அன்னை
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர்,
வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், ஊழியர்கள்,
வைத்தியசாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய நிர்வாக சபையினர். (சி/553361)

கண்ணீர் அஞ்சலி



அமரர் சமூகஜோதி
கா.கணேசதாசன்
சைவசமய வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த ஐயாவுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

க.சோதிலிங்கம் குடும்பம்,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (75412)

மரண அறிவித்தல்

மயில்வாகனம் காந்திமதிநாதன்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் Q 1/1, சாள்ஸ் அப்பாட்மென்ட், களுபோவலையை வதிவிடமாகவும் கொண்ட ம.காந்திமதிநாதன் நேற்று (16. 06.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோப்பாய் திரு. திருமதி மயில்வாகனம் - காந்திமதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - வேதநாயகி தம்பதியரின் மருமகனும் திருமதி கமலநாயகி (ஆசிரியை, RCTMV இராஜகிரிய) அவர்களின் அன்புக் கணவரும் கமல்நாத்தின் (மாணவன், SONA தொழில்நுட்பக் கல்லூரி, இந்தியா) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, Dr.மனோன்மணி, சுதந்திரநாதன், புனிதவதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பி.ப.5 மணிக்கு பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Q 1/1 சாள்ஸ் அப்பாட்மன்ட்,
களுபோவல.
T.P: *2764584.* (சி/553367)

தகவல்:
மனைவி, மகன்.

THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), K.K.S. *வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.*
(75422) "The royal is the best"

தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்ற விலாசத்தைக் கொண்டதும், 568460715V இலக்கம் கொண்டதுமான திருமதி வல்லிபுரநாதன் தனலட்சுமி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை யாழ்.நகரில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தோர் மேற்குறித்த விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (75414)

திருத்தி வாசிக்கவும்

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா, சிட்னி, வென்றவேத்விலை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி
நாகபூரணி சிவராசா
15.06.2008 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

நேற்றைய (16.06.2008) உதயனில் சுச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்றும், நேற்று திங்கட்கிழமை என்றும் தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது. திருத்தி வாசிக்கவும்.

கண்ணீர் அஞ்சலி

அன்னை
தங்கம்மா அப்பாக்குட்டி
சைவமும் தமிழும் செழித்தோங்க தம்மை அர்ப்பணித்து சிறியோருக்கு வாழ் வளித்த அன்னைக்கு எமது இதய அஞ்சலிகள்.

அலங்கார் நகைமாளிகை, யாழ்ப்பாணம். (75420)

கண்ணீர் அஞ்சலி

சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் புண்ணிய ஆத்மா அம்பாள் திருவடியில் அமைதியடைந்ததை அறிந்து எமது பிரார்த்தனையைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஆத்மஜோதி தியான மணிமண்டபம்,
ஏழாலை. (75409)

கண்ணீர் அஞ்சலி

சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் புண்ணிய ஆத்மா அம்பாள் திருவடியில் அமைதியடைந்ததை அறிந்து எமது பிரார்த்தனையைச் சமர்ப்பிக்கின்றோம்.

நீர்வேலி கந்தசாமி கோயில் பரிபாலன சபையினரும், அடியார்களும், ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும். (75401)

கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விசேட மீள் பரீட்சைகள் - 2008

கலைப்பீட மற்றும்இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைகளில் சித்திபெறத் தவறியதன் மூலம் தமது பட்டக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யாமலுள்ள மாணவர்கள், தமது பட்டக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுமுகாக விசேட மீள் பரீட்சை ஒன்று நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே அவ்வாறான மாணவர்கள் எவராவது முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட முதலாம், இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியிருப்பின் பரீட்சை விண்ணப்பப் படிவங்களைக் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 30.06.2008 ஆம் திகதிக்கு முன்பாகச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள். வெளிமாவட்டத்தில் வசிக்கும் மாணவர்கள் எவராவது மேற்படி பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருப்பின் தமது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், பல்கலைக்கழகப் பதிவிலக்கம், சுட்டெண், மற்றும் தோற்ற வேண்டியுள்ள பரீட்சை விவரம் (வருடம், அரையாண்டு) பாட அலகுக் குறியீட்டு எண் மற்றும் பாடத் தலைப்பு ஆகிய விவரங்களை 021 222 3091 எனும் தொலைநகலுக்கோ அல்லது dcanarts@sltnet.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ உடனடியாக அனுப்பிவைக்கவும்.

மேற்படி மீள்பரீட்சைகள் ஏற்கனவே இரண்டு தடவைகள் நடத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

17.06.2008 பதிவாளர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை வலி.மேற்குப் பிரிவு

வலிகாமம் மேற்கு பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கௌரவ பொருளாளரும், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும், வலி.மேற்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினருமாகிய உயர்திரு **நு.ஸாமதேவன்** அவர்களுக்கும், இப்பிரிவின் ஆளுநர் சபை உறுப்பினரும், யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளரும், வலி.மேற்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினருமாகிய **திருமதி சி.புனிதவதி** அவர்களுக்கும் நீதி அமைச்சினால் சமாதான நீதிவான் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டமையையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வட்டுக்கோட்டை. (ஙஙு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வலி.மேற்குப் பிரிவு (சங்கானை).

கண்ணீர் அஞ்சலி

சைவமும் தமிழும் வளர்ச்சியடைய தன்னையே பூரணமாக அர்ப்பணித்த அன்னை சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபையினரும் தொண்டர் சபையினரும்
தும்பளாவளைப் பிள்ளையார் கோயில் - அளவெட்டி. (75416)

கண்ணீர் அஞ்சலி

அன்னை
தங்கம்மா அப்பாக்குட்டி
நேற்று வரை தூணாகி
சைவத்தையும் தமிழையும் காத்தீர்கள்.
இன்று எமை விட்டு
வெகுதூரம் சென்றீர்கள்.
நாளை காவியத்தில்
பொன் எழுத்துக்களால் வாசிக்கப்படுவீர்கள்.

சிவசக்தி மணிமண்டபம்,
ஆவரங்கால்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும்,
ஆலோசனை சபையும், ஊழியர்களும். (சி/553362)

கண்ணீர் அஞ்சலி

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி
சைவத்தமிழ் உலகத்தின் தாயாக
உதிரம் உறையும்வரை
உத்தம தொண்டுகள் பல ஆற்றி
பாங்குடனே பண்பாட்டைக் காத்து - இன்று
இறைவனடி சேர்ந்துவிட்ட
உத்தமித் தாயாம்
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு
எமது கண்ணீர் பூக்களைக்
காணிக்கை ஆக்கி அவரது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ்.றோட்,
மல்லாகம். (75407)

ஸ்ரீ முருகன் ஹார்டுவெயர்.

மரண அறிவித்தல்கள்

தங்கராஜா சின்னத்தம்பி

சுதுமலை (மானிப்பாய்)யைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தங்கராஜா சின்னத்தம்பி 14.06.2008 சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுதுமலை வடக்கு சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் புதல்வரும் சிவமணியின் அன்புக் கணவரும் ரதிவதனி, தயாளன், தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீதரன், விஜித்தா, யசோதா ஆகியோரின் அன்பு மாமனும் அருண்பிரஷாத், அபிஷன், ஹர்ஷனா, மயூரா, அனிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2008) செவ்வாய்க்கிழமை ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (18.06.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
2360902 (சி/553366)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

திருமதி சகாதேவன் புவனேஸ்வரி

வசாவிளானைப் பிறப்பிடமாகவும்மூளாய்மற்றும்கொழும்பைவசிப்பிடமாகவும் மலேசியாவில் வசித்தவருமாகிய திருமதி சகாதேவன் புவனேஸ்வரி 13.06.2008 வெள்ளிக் கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சகாதேவனின் அன்பு மனைவியும் ரதானந்தனின் அன்புத் தாயும் பத்மாவதியின் அன்பு மாமியும் கஜனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.06.2008 ஞாயிற்றுக் கிழமை மலேசியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பறாளாய் வீதி,
சுழிபுரம். (75408)

தகவல்:
இராஜேஸ்வரி தர்மபாலச்சந்திரன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையற்ற செய்தியாளர்கள்

REPORTERS WITHOUT BORDER

இது புதியது!
புதினம் சொல்வது!!

நீங்களும் செய்தியாளர் ஆகலாம்
ஆம்..... அது வெகு இலகுவானது!
எல்லைகள் அற்ற செய்தியாளர்கள்
அணியில் நீங்கள் ஏன் இணைந்து
கொள்ளக் கூடாது?
உங்கள் பகுதியில் உள்ள
பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக
நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின்
நிகழ்வுகளை எங்களுக்கு அறியத்தாருங்கள்.
புகைப்படங்களையும் அனுப்பலாம்.

★ ★ ★

அவை உதயன் பத்திரிகையிலும் அதன்
சர்வதேசப் பதிப்பிலும்
இடம்பெறச்செய்யப்படும். தாமதிக்காதீர்கள்!
இன்றே உரிய தரவுகளுடன்

news@uthayan.com

photo@uthayan.com

எனும்
ஈ - மெயில்களுக்கு அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாக்குட்டி அம்மாவின் மறைவு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது

இந்து சமயப் பேரவையின் தலைவர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 17

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவின் மறைவு சைவ உலகில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது. அவரின் பணிகளை நினைவுபடுத்தி சமய முன்னேற்றத்துக்காக உழைக்கத் திடசங்கற்பம் பூணுவோமாக.

யாழ்.இந்து சமயப் பேரவையின் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் விடுத்த இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எமது சமயம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கிய போதெல்லாம் அவ்வப்போது அவற்றை எதிர்கொண்டு நல்வழிப்படுத்த பல அறிஞர்களும் ஆன்றோர்களும் நம்மத்தியில் தோன்றியுள்ளனர். அந்தவரிசையில் நல்லறிஞர் நாவலர் மறைந்த பின்னர் அந்தப்பணியைத் தொடரத் தமது அர்ப்பணிப்பாலும் சீரிய வாழ்க்கையாலும் நல்ல ஒரு பரம்பரை உருவானது. இப்பரம்பரை வழி வந்தவர் தான் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள். சைவ வாழ்க்கை வாழ்ந்து சைவத்தை பலவழிகளிலும் முன்னிலைப்படுத்த அயராது உழைத்தவர்.

ஆலயங்கள் வெறும் வழிபாட்டிடங்களாக மட்டுமல்லாது மக்களுக்கு நல்வழி காட்டித் திக்கற்றவர்களுக்கு புகலிடமாகவும் விளங்கவேண்டும் என்ற உயரிய சிந்தனையில் மிகவும் சிறப்பாக இயங்கும் தமது ஆலயத்தை முன்மாதிரியாகக் கொண்டு அறப்பணிகள் பல செய்தவர்.

இதற்காக உழைத்ததன் மூலம் ஆலய அறங்காவலர்கள் எவ்வாறு ஆலயப் பணிகளை விரிவுபடுத்திச் சமூகத்தை அதனுடன் இணைக்க வேண்டும் என்பதை தனது செயல் திட்டங்கள் மூலம் முன்னெடுத்துச் சென்றவர்.

இறுதிவரை சமூகத்திற்காக உழைத்த அம்மாவின் மறைவு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது. ஆனாலும் அவரின் பணிகளை நினைவுபடுத்தி சமய முன்னேற்றத்திற்காக உழைக்க இவ்விழப்பில் திடசங்கற்பம் பூணுவோமாக - என்றுள்ளது. (அ)

யாழ். மண்ணில் சைவ சமய மறுமலர்ச்சியை உருவாக்கியவர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

அகில இலங்கை இந்துமாமன்றம் இரங்கல்

கொழும்பு, ஜூன்17

யாழ். மண்ணில் சைவ சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் இழப்பு இந்து மக்களுக்கு பேரிழப்பாகும்.

அகில இலங்கை இந்துமாமன்றம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைவத்தமிழ் உலகிற்கு அளப்பரிய பணியாற்றி வந்த முதுபெரும் இறைபணியாளரான சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி காலமாகி விட்டார் என்பதை அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

நீண்ட காலமாகவே தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவராகப் பணியாற்றி வந்திருப்பதுடன் அதனுடன் இணைந்த வகையிலான சமூகப் பணிகளின் ஊடாகவும் யாழ். மண்ணில் சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை அம்மையாரைச் சாரும். இதனால் நம் நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியில் வாழும் இந்து மக்கள் அனைவராலும் போற்றப் பட்டு வந்தவர்.

அம்மையாரின் மறைவு இந்து மக்களுக்கு பேரிழப்பாகும். இவரது மறைவுக்கு மாமன்றம் ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறது- என்று அகில இலங்கை இந்துமாமன்றம் தனது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

அறுபதாவது அகவையில்

இன்று (17.06.2008) செவ்வாய்க்கிழமை அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்யும் எமது அன்புத் தந்தை

பிரம்ம ஸ்ரீ

கணபதி சாமிக்குரு சுதர்சனக் குரு (J.P)

(பிரதம குரு ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் சுவாமி கோயில்)

அவர்களுக்கு எமது இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் ஸ்ரீ வல்லிபுர மாயவனின் அனேக கோடி ஆசீர்வாதங்களையும் ஆவரங்கால் பருவதவர்த்தனி அம்பிகா சமேத நடராஜ இராமலிங்கேஸ்வரப் பெருமானின் திருவருளையும் பெற்று தம்பதி சமேதரராக பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வேண்டி நிற்கின்றோம்.

தாய், சகோதரர்கள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் கோயிலடி, ஆவரங்கால்

(75426)

படிவம்

இலங்கை கொழில் நுட்பவியல் சேவை பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam

தேரேறிவந்து எமை ஆண்டிடுவாயம்மா தாயே..!

S.V.முருகேசு

இல .154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 222 2911, 2222202

அடியவர்களின் துன்பங்களை நீக்கி வாழ்வில் நல்லருள் அருள்வாயம்மா...!

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

இல.50, 52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2988, 3096.

இரதமேறி வந்து காத்திடுவாய் தாயே

மொத்த,சில்லறை விற்பனையாளர்

ஏகாம்பரம் புடைவை மாளிகை

(72), 9, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

கண்ணீர்க் காணிக்கை

71, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

சைவமும் தமிழும் மறுமலர்ச்சி பெற தன்னை முழுமையாக அர்ப்பணித்த சிவத்தமிழ்ச்செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி

அன்னையின் மறைவு கேட்டு துயரடையும் நாங்கள் அவருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

துர்க்கா நகைப் பூங்கா

கண்ணீர்க் காணிக்கை

பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி.

சைவத்தமிழ் உலகின் கலங்கரை விளக்காக விளங்கிய சிவத்தமிழ்ச் செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களுக்கு எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

கலாசாலைச் சமூகம்

கண்ணீர் அஞ்சலி

சைவப்பணியுடன் தமிழையும் வளர்க்க அரும் பாடுபட்ட கலாநிதி

தங்கம்மா அப்பாக்குட்டி அன்னைக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்

கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு பேருதவி புரிந்த சிவத்தமிழ்ச் செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திகின்றோம்.

கலை,வர்த்தக மாணவர் மன்றம்
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கன்னாகம்

கண்ணீர் அஞ்சலி

தங்கம்மா அப்பாக்குட்டி

சைவத்திற்கும் தமிழுக்கும் தன்னிகரிலா தொண்டு செய்து தரணியில் தனக்கென வாழா பிறர்கெனவே வாழ்ந்து எண்ணிலாப் பணிகள் பல செய்துமே எமை விட்டுப் பிரிந்த அன்னையின் ஆத்மா சாந்தியடைய துர்க்கை அம்மனை அடிபணிந்தே போற்றிடுவோம்.

தர்மகர்த்தா சபை, வழிபடுவோர் சங்கம்
மாரிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

இதய அஞ்சலி

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி

தங்கம்மா அப்பாக்குட்டி

தாய்க்குலத்தின் தவப்பேறாய்
தரணியில் வந்துதித்த அன்னையே!
சிவத்தமிழ் செல்வியாய்
சிவப்பணியின் செம்மலாய்
அறப்பணியின் மேன்மையாய்
ஏழை எளியோரின் ஏணியாய்
சைவத்தின் ஞானியாய்
செந்தமிழின் ஜோதியாய்
மிளிர்ந்திட்ட அம்மையே! சிவப்பேறடைந்த உங்கள்
ஆத்ம சாந்திக்காக இறையடி இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஐடியல் அக்கடமி சமூகம்

தலை[illegible]கம் – [illegible]ப்பாய், கிளை I – காரைநகர்
– [illegible] கிளை III – மானிப்பாய்

விழிமழையில் நனைந்து....

சைவமும் தமிழும் தழைத்தோங்க தன்னையே அர்ப்பணித்த சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி

தங்கம்மா அப்பாக்குட்டி

அம்மையாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்

ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/ மாரிப்பாய் மெமோறியல்
ஆரம்பப் பாடசாலை

கண்ணீர் அஞ்சலி

துர்க்காதுரந்தரி
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள் சிவபதமெய்திய செய்தி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. சமயப்பணியூடாக, சமூக, அறப்பணிகள் செய்து தம்மையே அர்ப்பணித்த மாதா, ஆலயத்தை சமூகப்பணி மையமாக வைத்து ஏழைகளுக்கெல்லாம் உதவி செய்த அன்னாரது அரும்பணி ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சுந்தரேசன்"

யாழ்.வீதி, மாரிப்பாய்.

உரிமையாளரும் உத்தியோகத்தர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MCS 324, Palaly Road, Jaffna. (Near Alady Junction)

இன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பிரிவின் பட்டமளிப்பு விழாவில் தகவல் தொழில்நுட்பமானி பட்டத்தை பெறும் எமது

நிறுவன விரிவுரையாளரான

தர்மகுலசிங்கம் தர்மேந்திரா BIT(Col)

அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20.07.1928

மறைவு: 29.06.2007

அமரர் சுப்பிரமணியம் துரைராஜா

(யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கில் பிறந்து வாழ்ந்தவரான)

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வையகம்
ஆண்டு ஒன்று ஆயினும் ஆறாது உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றும் எக்காலம் உள்ளவரை
உங்கள் இனிய நினைவுகள் என்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (75440)

தகவல்:
குடும்பத்தினர்

துயர் பகிர்கின்றோம்



யாழ்.பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
செல்வி சிவபாதம் பெய்சிராணி
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
வல்லிக்குட்டி சிவபாதம்

அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (75421)

நல்லூரிசங்கம், பிரதேசசெயலகம், யாழ்ப்பாணம்.

கண்ணீர் அஞ்சலி

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி சைவ மும் தமிழும் வளர்ச்சி பெற தன்னையே முழு மையாக அர்ப்பணித்து இயங்கிய

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரி வித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தி யடைய பிரார்த்திக்கின்றோம்.

185 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (75434)

வினோ நகைப்பூங்கா
உரிமையாளரும், ஊழியர்களும்.

கண்ணீர் காணிக்கை

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

எங்கள் கல்லூரியில் ஆசிரியராகவும், தமிழ்த்துறைப் பொறுப்பாசிரியராகவும் கடமை புரிந்து, ஓய்வு பெற்று, அதன் பின்பும் எம்மோடு நெருங்கிய உறவைப் பேணிவந்த அம்மாவின் பிரிவால் நெகிழ்ந்துருகுகிறோம். அம்மா நித்திய இன்பம் உறுக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்லூரிச் சமூகம் யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
யா/பொன்பரமானந்தா ம.வி. குரும்பசிட்டி (75429)

சிவத்தமிழ் அன்னைக்கு இதய அஞ்சலி

சைவத்தமிழ் உலகிற்கு அளப்பரிய பணியாற்றி வந்த முதுபெரும் இறைபணியாளரான அன்னை

சிவத்தமிழ் செல்வி

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய பரம்பொருளைத் தொழுகின்றோம்.

ஸ்ரீ நாகபூஷணி அழுதசுரபி (சி/553373)
அன்னதான சபை, நயினாதீவு 2ஆம் வட்டாரம்.

கண்ணீர் அஞ்சலி

சைவத் தமிழ் உலகின் அகல்விளக்காக விளங்கிய எமது

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள் அம்பாள் திருவடியில் சேர்ந்தமையை அறிந்து எம் பணிவான அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

சிறி நதியா நகைமாளிகை
உரிமையாளரும்,
பணியாளர்களும்.

இல.56,
இல.01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (75435)

கண்ணீர் அஞ்சலி

சைவத்தின் ஒளி விளக்காய் விளங்கிய எமது பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவியும் பழைய மாணவர் சங்க காப்பாளருமாகிய

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அன்னையின் ஆத்மா சாந்தியடைய துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மல்லாகம் கலிஸ்ட வித்தியாலயம். (75444)

கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய வளர்ச்சியிலும் திருப்பணியிலும் பங்காற் றியவரும் கும்பாபிஷேக மகோற்சவ காலத்திலும் ஆசியுரை வழங்கிய வருமான

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

(தலைவர், தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தானம்)

அவர்களின் மறைவால் துன்பக் கடலில் மூழ்கியிருக்கும் துர்காபுரம் மகளிர் இல்ல சிறார்களுக்கும், அன்னாரின் குடும்பத்தின ருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக்கொள்வதோடு அன்னையின் ஆத்மா அம் பாளின் பாதார விந்தங்களில் சாந்திபெற வேண்டி நிற்கின்றோம். (சி/553375)

ஆலய பரிபாலன சபை, பாணன்குளம் நாச்சியம்மன் தேவஸ்தானம், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கண்ணீர் அஞ்சலி

சிவத்தமிழ்ச் செல்வி
அன்னை
தங்கம்மா அப்பாக்குட்டி

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச் சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின் றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவ ரின் ஆத்மா சாந்தியடைய துர்க்கா அம் பாளை பிரார்த்திக்கிறோம்.

(75437)
தபாலகம்,
தெல்லிப்பழை.

தெல்லிப்பழை அஞ்சல் அதிபர்,
உப அஞ்சல் அதிபர்கள் மற்றும்
சக ஊழியர்கள்
அஞ்சல் அதிபர், மானிப்பாய்.

கண்ணீர் அஞ்சலி

சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையாற்றி மக்கள் மனதில் நிறைந் திருக்கும் அன்னை அவர்கள் இறைபம் எய் திய செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னையின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல துர்காதேவி அம்பாளை பிரார்த்திக் கின்றோம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

HNB Assurance
Jaffna. (75436)

அஞ்சலிக்கின்றோம்

மதங்கடந்து மானுட நேசிப்புடன் எம் மண்ணுக்காய் தன்னை அர்ப்பணித்து அறப்பணி செய்த

அமரர் கலாநிதி

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களுக்கு எமது இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/553376)

இயக்குநர், அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்.

மரண அறிவித்தல்கள்

ஆறுமுகம் இராஜகோபால்

(பிரதம லிகிதர், பொலிஸ் திணைக்களம்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமா கவும், வதிவிடமாகவும் கொண்ட ஆறு முகம் இராஜகோபால் 16.06.2008 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியினரின் மகனும் இரத்தினகோபால் காலஞ்சென்ற வர்களான இரத்தினசபாபதி, கனகசபாபதி ஆகியோரின் அன் புச்சகோதரரும் மனோன்மணியின் அன்புக் கணவரும் இரா ஜேஸ்வரி (சுவிஸ்), சரோஜினி (ஆசிரியர், நுவரெலியா) இரா ஜேஸ்வரன் (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன் புத் தந்தையும் சந்திரபாலன், பொன்னம்பலம், தமிழ்ச் செல்வி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2008) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுறோட்,
காரைநகர். (75438)

தகவல்
இ.இராஜேஸ்வரன்(ப[illegible])

திருமதி டானியல் முருகேசு நகுலாம்புசம்

'மலா வாசா', கரவெட்டி மேற்கு, கர வெட்டி என்னும் முகவரியைப் பிறப்பிட மாகவும் 'புனிதம்', வதிரி கரவெட்டி என் னும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டானியல் முருகேசு நகுலாம்புசம் 14.06.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் டானியல் முருகேசு அவர்களின் அன்பு மனைவியும், D.M.வேகா பரணம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), D.M.கற்பகநாயகம், அமரர் D.M.விபுலானந்தம், D.M.வித்தியாதரன் (அவுஸ்தி ரேலியா), A.அருந்தவமலர் (சுவிஸ்), அமரர் D.M.தேவநா யகம், D.M.தேவாபரணம் (அவுஸ்திரேலியா), D.M.தேவநே சன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், அமரர் D.M.வேதநாயகம், D.M.வேதாரணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சிறியதாயும், வே.சந்திரவதனா, க.இருதயமலர், வி.ரஞ்சித மலர், அ.அமரதாசன், தே.அனிற் றாபேர்ளி சாந்தி, தே.ஸ்ரெலா புஸ்பராணி ஆகியோரின் மாமியும், வே.கேசவன் (லண்டன்), பிராதபன் கௌசல்யா (லண் டன்), வே.கௌசிகன் (லண் டன்), ஜெயன்ஒரிக்கா (ஆசிரியை, யா/விக்கினேஸ் வராக் கல் லூரி, கரவெட்டி), க.கொட்பிறி சுகத் (கணக்காளர், சிலிங்கோ கிராமின், கொழும்பு), க.ரதீக்கா, வி.சாரங்கி, வி.சாரங்கன் (அவுஸ்ரேலியா), அ.விமலினி (சுவிஸ்), தே.இமெல்டா, தே.ஸ்ரெப்னி (அவுஸ்ரேலியா), தே.தேவனா ஓஷானி, டானியா அஷ்வினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பேர்த் தியும், கே.டனுஷ், கே.அக்ஷை, பி.பிரதோஷ், பி.பிரணவி (லண்டன்), ஜெ.ஒஸ்னிஷெரோன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.06.2008) மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத் தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

'புனிதம்', வதிரி,
கரவெட்டி. (சி/553379)

தகவல்
குடும்பத்தினர்.

திருமதி ஞானமலர் சற்குணநாதன்

கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி ஞானமலர் சற்குணநாதன் 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மனோண்மணி தம்பதியரின் அன்பு மகளும் இருபாலை காலஞ்சென்ற சின்னத்துரை தம்பதிகளின் மருமகளும் சின்னத்துரை சற்குணநாதனின் அன்பு மனைவியும். தர்ம குணதேவி, தர்மகுணரஞ்சினி, தர்மகுணராஜன், தர்மகுண ரேவதி ஆகியோரின் அன்புத் தாயும். சச்சிதானந்தம், யோகராசா, இராச மலர், ஜெயந்தி,மதியழகன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ் சென்ற ஞானச்சந்திரவேல், ஞானஇந்திரவேல், ஞான சேகரவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானேஸ்வரி, பஞ்சாட்சர தேவியின் (ஆசிரியை, யா/செங்குந்தா இந்துக்கல்லூரி) அன்பு மைத்துணியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக மோதரையிலுள்ள வீட்டிலிருந்து 16.06.2008 நேற்று மாலை 4.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாதம்மிட்டி மயானதில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானபாஸ்கரோதய வீதி,
கல்வியங்காடு,யாழ்ப்பாணம் (75439)
தொ.பே. 0212226570, 0112527647

தகவல்:
ஜீ.ரி. ஞானசேகரவேல்
(சகோதரன் ஜேபி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி வைத்தியர்கள் நேற்று சுகாதார அமைச்சுக்கு முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 17

பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் மற்றும் உதவி வைத்தியர்கள் நேற்று திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் வளாகத்தில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். வாழ்க்கைச் செலவு, எரிபொருள்செலவு, அவசர அழைப்பு போன்றவற்றுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டும் என்பது வைத்தியர்களின் கோரிக்கை. இது குறித்து சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை மதிப்பீட்டு ஆணைக்குழுவிடம் அறிவித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அத்துலகஹன லியனகே தெரிவித்தார். (அ-02)

சுன்னாகத்தில் சஞ்சிகை அறிமுக விழா

யாழ்ப்பாணம் ஜூன் 17

வலி. தெற்கு பிரதேச வாசகர்வட்ட அனுசரணையுடன் சுன்னாகம்பொது நூலகத்தினர் நடத்திவரும் ஞான விலாசம் நிகழ்ச்சித்தொடரில் இம்முறை ஞானம் சஞ்சிகை அறிமுக விழா நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் வலி. தெற்குப் பிரதேசசபைச்செயலாளர் திருமதி ச. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கவிஞர் ம. பா மகாலிங்கசிவம் 'சமகால ஈழத்து இலக்கியமும் ஞானம் சஞ்சிகையும்' என்ற தலைப்பிலும், ஞானம் சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன் 'சுவையும் சுமையும் ஞானம் சஞ்சிகை வெளியீட்டு அனுபவங்கள்' என்றதலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். இந்நிகழ்வில் ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரன் கௌரவிக்கப்படுவதுடன் ஞானம் இதழ்கள் காட்சிக்கு வைக்கப்படவும் உள்ளன. (அ-02)

நான்கு பேர் கொண்ட குடும்பம் சரண்

யாழ்ப்பாணம் ஜூன் 17

உயிர் அச்சுறுத்தல்உள்ளதாகத் தெரிவித்து குடும்பம் ஒன்று நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளது.

ஊரெழுவைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றே இவ்வாறு சரணடைந்துள்ளது. (அ-25)

புதுக்குடி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்கள் இடம்பெற்றுள்ளன.

புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் களஞ்சியத் தளம் ஒன்றின் மீது நேற்றுக்காலை 10.00 மணியளவில் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் -

முற்பகல் 11.30 மணியளவில் நாகர்கோவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர் தாக்குதலை மேற்கொண்டது என்றும் - படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. (சி)

இன்று நயினை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்று அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.

இம்முறை திருவிழா ஆரம்பமான நாள் முதலே பெரும்திரளான மக்கள் தினமும் ஆலயப் பகுதியில் திரண்டு வருகின்றனர்.

இன்று தேர்த் திருவிழா ஆகையால் ஆலயப் பகுதியில் அடியார் கூட்டம் அலைமோதும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடியார்களின் வசதி கருதி அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது. போக்குவரத்து சபையினரும் விசேட பஸ் சேவைகளை ஒழுங்குசெய்துள்ளனர்.

பொதுமக்களுக்கு உதவுவதில் ஆலயத் தொண்டர்கள், சாரணர்கள் மற்றும் கடற்படையினருடன் பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை - யாழ் நகருக்கும் குறிகாட்டுவான் துறைக்கும் இடையில் அடியார்கள் மூன்று இடங்களில் இறக்கப் பட்டு பாதுகாப்புச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதால், ஒரு வழிப் பயணத் துக்கு சுமார் 4 மணி நேரம் செலவிடுவதாகவும் அசௌகரியங்களும் ஏற்படுகின்றன என்று பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (அ-2-111)

மதவாச்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் மதவாச்சி சோதனைச் சாவடியில் குழந்தைகளும், பெண்களும் உட்படப் பெருமளவிலான தமிழ்ப் பயணிகள் காத்துக் கிடந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மொறட்டுவைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து மதவாச்சி ஊடாகத் தமிழ்ப் பயணிகள் சென்று வரத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டது.

தற்போது நேற்று வவுனியாவில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து மீண்டும் அத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டது.(சி)

குறைந்தது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்காவிட்டால் மேற்படி கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று இத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இத்தொழிற்சங்கங்களைக் கூட்டிணைக்கும் 'தேசிய தொழிற் சங்க மத்திய நிலையம்' நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது. அப்போதே மேற்படி முடிவு அறிவிக்கப்பட்டது.

இந்த மத்திய நிலையத்தின் தலைவரும் ஜே.வி.பியின் எம்.பியுமான கே.டி.லால் காந்த இது தொடர்பாக அங்கு கூறியவை வருமாறு:-

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு மூவாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவேண்டும் என்று இந்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது நாம் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

அந்தக் கோரிக்கையை அரசு நிறைவேற்றவில்லை. ஆனால் தற்போதைய வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இந்த 3 ஆயிரம் ரூபா அதிகரிப்புக் கூடப்போதாது.

ஆகக்குறைந்தது 5 ஆயிரம் ரூபா வேனும் அதிகரிப்பு வழங்கப்பட்டால்தான் ஓரளவேனும் மக்களால் வாழ்க்கையைச் சமாளிக்க முடியும். ஆனால் 5 ஆயிரம் ரூபாவும் கூடப்போதாது என்றே மக்கள் கூறுகின்றனர். (அ-சி)

SUBRA (14)

தரம் 05

புலமைப் பரிசில் வழிகாட்டல்

கருத்தரங்கு தொடர் - 06

18.06.2008 புதன்

காலை 7 - மாலை 5.30 வரை

* பல வளவாளர்கள் கலந்து கருத்துரை வழங்குவர்
* பயிற்சிப் பரீட்சை (100 மாணவர்களுக்கு மட்டும்)

தரம் 4 புதிய பிரிவு ஆரம்பமாகி விட்டது.

ஆசிரியர் : கைலைநாதன்

கணக்கீடு

கருத்தரங்கு A/L 2008/DAY

ஆரம்பம்:- நாளை 6.15 A.M (செவ், புதன், வியாழ 6.15 A.M)

S.தவா

B.com (Hons) (Acc.SPL)

UNIVERSAL

யா/ இந்து மகளிர் கல்லூரி அருகில்

மின்பாவனையாளர்களே!

உங்கள்மின்சார கட்டணத்தை

30% முதல் 60% வரை

குறை வேண்டுமா?

விபரங்களிற்கு:-

Jaffnd Technical Institute,

No. 45, Clock Tower Road,

Jaffna T.P. 2226434

Microsoft Certified Systems Engineer

* குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 18.06.2008 09.30AM

இன்றும் நாளையும் 50% கற்கைநெறிக் கட்டண சலுகை

விபரங்கள் நேரில்

324, பலாலி வீதி, MCS

புனரமைப்பு வேலையின் நிமித்தம் கஸ்தூரியார் வீதி மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 17

புனரமைப்பு வேலைகளின் பொருட்டு நகரின் தென்பகுதி நுழைவாயிலான கஸ்தூரியார் வீதி எதிர்வரும் ஒருமாதகாலத்துக்கு மூடப்படவுள்ளது.

நாவலர் வீதிச் சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதிச்சந்திக்கும் இடையிலான கஸ்தூரியார் வீதி பகுதியியே எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்துக்கு வாகனப் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருக்கும். சகல வாகனங்களும் கே. கே.எஸ் வீதி ஊடாக நகரினுள் நுழைவதற் கும் ஆஸ்பத்திரி வீதி கோணாந்தோட்டம் வீதி ஊடாக நகரிலிருந்து வெளியேறு வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். வீதி தடைசெய்யப்படும் விவரம் வருமாறு:-

நவீன சந்தைப்பகுதி 19.06.08 - 24.06.08

பொன்னம்பலம் வீதி - செம்மாதர் ஒழுங்கை 24.06.08 - 29.06.08

செம்மாதர் ஒழுங்கை - ஸ்ரான்லி வீதிச் சந்தி 29.06.08 - 04.07.08

ஸ்ரான்லி வீதிச்சந்தி - கன்னாதிட்டி வீதி 04.07.08 - 13.07.08

கன்னாதிட்டி வீதி - நாவலர் வீதிச் சந்தி 13.07.08 - 19.07.08

(அ-02)

மென்பந்தாட்டம்

மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின்15 ஆவது ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்றில் இன்று பி.ப 3.00 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகம் மோதுகிறது.

நாளை பி.ப 3.00 மணிக்கு கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநாவலூர் விளையாட்டு கழகம் மோதுகிறது. (02-218)

பேச்சு மூலமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

இலங்கையுடனான உறவுகளை நெறிப்படுத்தும் எமது கொள்கைகள் உறுதியாகவும் மாற்றமடையாமலும் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை மதிக்கும் அதேவேளை, அந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண உதவுவதில் நோர்வே அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பேசும் சமூகங்களின் நியாயபூர்வமான துயரங்களுக்குத் தீர்வைக் காணும் அதேவேளை, அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்வைக்காண நோர்வே உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

தற்கொலைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிய பொலிஸாரும் ஒன்று கூடியிருந்த சமயமே, அவர்களை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இத்தாக்குதல் இடம்பெற்ற சமயம் அந்தப் பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்திலோ, அதன் முன்றிலிலோ பொலிஸ் உயரதிகாரிகள் எவரும் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

'ஏ - 9' வீதியை அண்டியுள்ள இந்தப் பொலிஸ் அலுவலகத்தின் முன்பாக திடீரென வெடிகுண்டு நிறைந்த மோட்டார் சைக்கிளில் நுழைந்த மர்மநபர் ஒருவர், கூட்டமாக இருந்த பொலிஸாரை நெருங்கி குண்டை வெடிக்கவைத்துத் தாமும் உயிரிழந்து, பொலிஸாரையும் கொலை செய்திருக்கின்றார். அவர் வந்த மோட்டார் சைக்கிள் அப்பகுதியில் சுக்கு நூறாகிச் சிதறிக் காணப்பட்டது.

இத்தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 12 பொலிஸார் கொல்லப்பட்டனர். மொத்தம் 40 பேர் வரை காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 4 பொதுமக்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களில் 8 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் அவர்கள் அநுராதபுரம் மற்றும் கொழும்பு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் பதற்றம்

இத்தாக்குதலையடுத்து வவுனியா ஊடான ஏ - 9 வீதியில் பொதுமக்களின் போக்குவரத்தைத் தடை செய்த படையினர் சம்பவ இடத்தை உடனடியாகச் சுற்றி வளைத்துத் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

குண்டுத தாக்குதல் மற்றும் தீவிர தேடுதல்களால் வவுனியாவில் நேற்றுப் பெரும் பதற்றம் நிலவியது.

நகரில் மக்கள் நடமாட்டம் வழமைக்கு மாறாகக் குறைந் திருந்தது. பாடசாலைகளில் மாணவர் வரவு குறைந்தளவிலேயே காணப்பட்டது. வவுனியா நகர் எங்கும் படையினர் குவிக்கப்பட்டுக் கடும்சோ தனை நடவடிக் கைகளும் இடம் பெற்றன.

பல்லாயிரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை வருவதும், இறுதி அஞ்சலி செலுத் துவதும், போவதுமாக இருந்த சோகக் காட்சியை சமீபகாலத்தில் எந்த நிகழ்விலும் காணவில்லை என்று கூறும் அளவிற்கு மக்கள் கூட்டம் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய சூழலில் அலை மோதியது.

அன்னையின் திருவுடல் நேற்றுக் காலை 9 மணிவரை அவரது பிறந்த மனையான தெல்லிப்பழை 'தாமரை' இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அங்கு பெரும் திரளான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அங்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. அதன் பின்னர் அன்னையின் திருவுடல் துர்க்கையம்மன் ஆலய யாத்திரிகர் மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு காலை 10 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அன்னைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பெரும் மக்கள் கூட்டம் திரள்திரளாக அலைமோதியது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், திணைக்களங்களின் தலை வர்கள், சமூகப் பெரியார்கள், தொண்டு நிறுவனங்களின் பிரமுகர்கள், அன்னையால் நிர்வகிக்கப்பட்ட இல்லங்களைச் சேர்ந்த பிள்ளைகள் என்று பல்லாயிரக்கணக்கான எண்ணிக்கையானோர் திரண்டு அஞ்சலி செலுத்தினார்கள். சோகம் ததும்பியவர் களாக மக்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ்சவுந்தர நாயகம் ஆண்டகை, குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம், யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதிராசா, அரச அதிபர் கே. கணேஷ், யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கன், யாழ் மேல்நீதி மன்ற நீதிபதி ஆர். ரி. விக்னராஜா, மாவட்ட நீதிபதி இரா . வசந்தசேனன், முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி ஆகியோர் உட்பட சமயப் பெரியோர்கள் சமய, சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் அன்னையின் பூதவுடலுக்கு மாலைகள் மற்றும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் பிற்பகல ஒரு மணியளவில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமை யில் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமானது. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ் அரச அதிபர் கே. கணேஷ், துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முக லிங்கன், மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா, பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் உட்பட பலர் அஞ் சலி உரை நிகழ்த்தினார்கள்.

இறுதி ஊர்வலம்

பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரின் இறுதி ஊர்வலம் ஆரம்பமானது. ஆயிரக்கணக்கான மக்கள் கதறி அழ அன்னையின் திருவுடல் சிறிய தேரில் வைக்கப்பட்டு நிலப்பாவாடை விரித்து கட்டுப்பிட்டி இந்துமயானம்வரை சென்றது. வழி நெடுகிலும் பெரும் எண் ணிக்கையான மக்கள் கூடி நின்று கண்ணீர் மல்கியவாறு மலர் தூவி அன்னைக்கு இறுதி விடை கொடுத்தனர். மாலை 4.30 மணியள வில் அன்னையின் புகழுடல் மயானத்தைச் சென்றடைந்தது. அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழ அன்னையின் சிதைக்கு பெறாமகன் உமாசுதன் தீமூட்டினார். அங்கு அன்னையின் உடல் தீயுடன் சங்கமமாகியது. (அ-50-68)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெ[illegible] அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org